பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 01 வெள்ளிக்கிழமை 17.09.2021 கதிர் 316

## இது ரகசியம் அல்ல!

வெளிநாட்டிலிருந்து ஒரு நண்பர் அழைப்பு எடுத்தார். *"உங்கள் பெயரின் முதல் எழுத்தில் விசிறியை எடுத்தால் பொருத்தமாக இருக்கும்"* – என்றார்.

எனக்கு விளங்கவில்லை. என்னவென்று கேட்டேன்.

*"நீங்கள் கூட்டமைப்* பக்கம்02

## நேற்று தொற்று 2,271

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 271 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி நாட்டில் 12

## ஊரடங்கு தளர்வா? நீடிப்பா? இன்று இறுதித் தீர்மானம்

நாட்டில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 21ஆம் திகதி தளர்த்துவதா? அல்லது நீடிப்பதா? என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் ஜனாதிபதி தலைமையில் இன்று நடைபெறவுள்ள கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின்போது எடுக்கப்படும்.

– இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, விசேட வைத்தியநிபுணர்கள்சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்து நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை மேலும் நீடிக்க வேண்டும் என அரசிடம் கோரியுள்ளது. 2



## 118 பேர் சாவு!

இலங்கையில் மேலும் 118 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரசதகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 817 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 118 பேரில் 61 2

# அ'புரத்தில் லொஹான் துன்புறுத்திய அரசியல் கைதிகளுடன் நாமல் பேச்சு



## மறுவாழ்வு - சமூகத்தில் இணைப்பதை தான் கவனிப்பேன் என்று நேரில் உறுதி

(ந.லோகதயாளன்)

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

சிறைச்சாலை முகாமைத்துவ முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மதுபோதையில் தனது சக நண்பர்களுடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று தமிழ் அரசியல் கைதிகளை நேரில் அழைத்து முழந்தாளிடச் செய்து, அநாகரிகமாகவும் அச்சுறுத்தலாகவும் நடந்துகொண்டதன் பின்னர் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று சிறைச்சாலைக்கு சென்று பாதிக்கப்பட்ட கைதிகளுடன் உரையாடியுள்ளார். 12

## வவுனியாவில் மேலும் 3 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் நேற்று மூவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் 12

## 12 வருட சிறைவாசத்தின் பின்னர் அரசியல் கைதி ஒருவர் விடுதலை

(எஸ்.நிதர்ஷன்)

இறுதிப் போரின்போது இராணுவத்திடம் சரணடைந்து மறுவாழ்வு பெற்ற பின்னர் விடுதலையாகி, மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் கைதுசெய்யப்பட்டு கடந்த 12 வருடங்களாக வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நடேசு குகநாதன் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவரின் விடுதலை தொடர்பாக அவருடைய குடும்பத்தினரின் கருத்துத் தொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு, உடையார்கட்டைச் சேர்ந்த நடேசு குகநாதன் இறுதிப் போர் நடைபெற்ற காலப்பகுதியான 2009.05.18 அன்று ஓமந்தையில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். அங்கிருந்து அவர் வவுனியா – பூந்தோட்டம் முகாம் மற்றும் மாரம்பைக்குளம் முகாமில் விசாரணை செய்யப்பட்ட பின்னர், ஒரு மாதம் வவுனியா 2

## ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் உமாபதி தொற்றால் மரணம்

### தாய் இறந்து 14 நாள்களின் பின் மகனும் சாவு

(வவுனியா நிருபர்)

முன்னாள் கிராம அலுவலரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினருமான பஞ்சாட்சரம் உமாபதி கொரோனாத் தொற்றால் நேற்று மரணமடைந்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக 12



## வடக்கில் 15 நாளில் 225 பேர் பலி

செப்டெம்பர் மாதத்தின் முதல் 15 நாள்களில் வடக்கு மாகாணத்தில் 6 ஆயிரத்து 667 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 225 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் ஓகஸ்ட் மாதத்தில் 228 பேர் கொரோனா நோயால் உயிரிழந்த நிலையில் செப்டெம்பர் மாதத்தின் 12

## வடக்கு, கிழக்கு சிறைகளுக்கு மாற்றுமாறு தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள்!

### அநுராதபுரம் சென்ற கஜன்களிடம் நேரில் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

பாதுகாப்புக் கருதி வடக்கு – கிழக்கில் உள்ள சிறைச்சாலைகளுக்கு தம்மை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தம்மிடம் அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 12



## வவுனியாவில் 68 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 68 பேருக்குக் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

*பில் வைத்த திரி நன்றாக வேலை செய்கின்றது. எனவே உங்கள் பெயரை இனி 'வத்தி' என்று வைத்தால் நன்றாக இருக்கும்"* – என்றார் அவர்.

எனக்குப் புரிந்த மாதிரியும் இருந்தது, புரியாத மாதிரியும் இருந்தது.

*"நான் வத்தி வைத்தேனா?"* – என்று கேட்டேன்.

*"மாறி, மாறி செய்திகளைப் போட்டு, மூட்டி விட்டு, கலகத்தை ஏற்படுத்தியவர் நீங்கள்தானே...?"* – என்று நேரடியாகக் குற்றம் சுமத்த வந்தார்.

*"நாங்கள் உள்ளதை உள்ளபடி சொன்னோம். அதுவாகப் பற்றிக் கொண்டமைக்கு நாம் என்னசெய்ய முடியும்? நாம் மூட்டியது கலகம் என்றால் 'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்று பார்த்திருக்க வேண்டியதுதான்...!"* – என நான் பதிலளித்தேன்.

அவர் சொன்னவை உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் இப்போது உண்மை நிலைமை அம்பலமாகத் தொடங்கி விட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒன்றிணைவு என்பது இன்றைய நிலையில் கொள்கைக் கூட்டு அல்ல. தலைவர்களின் தனித்தனித் தேவைகள், நோக்கங்களுக்கான இணைவு.

பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மாறி, மாறி வெளியிடும் கருத்துகள் மூலம் அவை அம்பலமாகி வருகின்றன.

கொள்கை இல்லாமல் இணைந்த கூட்டைக் கூட, ஒருவாறு சரி பண்ணி, அரசியல் பயணத்தைத் தொடர்ந்திருக்க முடியும். கூட்டமைப்பைத் தலைமை தாங்கும் சம்பந்தன், மாவை போன்றோருக்கும் அதற்கான தகுதியும், விருப்பும், ஈடுபாடும், நோக்கமும் கூடக் கிடையாது.

மோடியையும், கோட்டாவையும், சர்வதேசத் தலைவர்களையும் சந்திக்கப் போகும் போது தமிழர்களின் ஏகோபித்த தலைவன் நானே என்று காட்டுவது மட்டுமே சம்பந்தனின் இலக்கு. அந்தத் தலைமையைப் பெற்றதற்கான பிரதியுபகாரமாக – கடப்பாடாக – கூட்டமைப்பை பல கட்சிகளின் கூட்டாகக் கொண்டு நடத்துவதற்கு அதன் தலைவர் என்ற முறையில் பத்து வீத முயற்சியைக் கூட எடுத்தவரேயல்லர் சம்பந்தன்.

மாவைக்கும், சம்பந்தனுக்கும், சித்தருக்கும், செல்வத்துக்கும் கூட்டமைப்பில் ஒன்றுபட்டு நின்றால்தான் தத்தமது வெற்றிகளை உறுதிப்படுத்தலாம் என்ற நிர்ப்பந்தம்.

கட்சிகள் தனித்தனியே தேர்தலில் நின்றால் மாவைக்கு ஏற்பட்ட கதி மற்றைய தலைவர்களுக்கு ஏற்பட்டு விடலாம்.

தேர்தல் என்றதும் சம்பந்தரிலிருந்து செல்வம் வரை ஐக்கியம் என்பார்கள். தேர்தல் முடிந்ததும் வேதாளம் முருங்கையில் ஏறிவிடும். இப்போது வேதாளங்கள் மீண்டும் தனித்தனியே மரங்களில் ஏறி உச்சிக் கொப்புகளில் நின்று ஊளையிடுகின்றன.

யுத்தத்தை இடைவிடாமல், நிறுத்தாமல், இடைவெளியின்றித் தொடர்ந்தால் தான் புலிப் பயங்கரவாதிகளைத் தோற்கடிக்கலாம் என்று அரசுக்கு வலியுறுத்தி ஆலோசனை கூறி, இறுதி யுத்தம் வரை அரசுப் படைகளுடன் நின்று திமிறெடுத்தவர்களுக்கு – யுத்தத்தின் பின்னரும் 2010 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவின் வெற்றிக்கு ஓடாய்த் தேய்ந்து, மாடாய் உழைத்தவர்களுக்கு – தமிழ்க் கூட்டமைப்பில் முழு இடமளித்து, அவரணைத்தார் சம்பந்தன். அதே சம்பந்தன் முன்னாள் விடுதலைப் புலி இயக்கப் போராளிகள் முதல்தடவையாக இணைந்து, 'ஜனநாயகப் போராளிகள் கட்சி' ஆக வந்தபோது அவர்களைப் புலனாய்வுத் துறையின் ஏவல் அணி என்றார் பகிரங்கமாக. அதுவும் பக்கத்தில் புலனாய்வுத் துறையின் 'ஒரிஜினல்' ஏவல் அணியைப் பங்காளிக் கட்சியாக வைத்துக் கொண்டு.

கூட்டமைப்புக்குள் பலரும் ஒன்றுபட்டு எதிர்க்க அதையும் மீறி கூட்டமைப்புக்கு வினையாக விக்னேஸ்வரனைக் கொண்டு வந்து சேர்ந்தார் சம்பந்தன். அந்த விக்னேஸ்வரன் கடந்த பொதுத் தேர்தலில், அதே சம்பந்தனுக்கு எதிராக முன்னாள் போராளியான ரூபனைக் களத்தில் இறக்கியதும், அந்த எதிர்ப்பைச் சமாளிக்க – முகம் கொடுக்க – தாம் முன்னர் புலனாய்வாளர்களின் ஏவலர்கள் என்று கூறிய ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் அவருக்குத் தேவைப்பட்டனர். அவர்களைத் திருகோணமலைக்கு அழைத்து, தமக்காகக் களத்தில் இம்முறை இறக்கினார். புலிகளின் முன்னாள் திருகோணமலைப் பொறுப்பாளரான ரூபனைச் சமாளிப்பதற்காக ஜனநாயகப் போராளிகள் கட்சி மீதான 'புலனாய்வாளர்களின் ஏவல் அணி' என்ற கதையைத் துடைத்தார் சம்பந்தன்.

என்றாலும் கூட அக்கட்சிக்கு கூட்டமைப்புக்குள் இருக்க இடம் கொடுக்கவில்லை. ஆக ஒண்டுவதற்கு இடம் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதுவும் சி.வீ.கே. சிவஞானம் போன்றோரின் அழுத்தம் காரணமாக. இல்லையேல் அந்த இடமும் கொடுத்திருக்க மாட்டார்கள்.

புலியை அழிப்பதற்குக் கடைசி வரை சந்நதம் கொண்டு நின்ற புளொட்டுக்கு, முழுமையாக இடமளித்து, ஜனநாயகப் போராளிகளுக்கு ஒண்டுவதற்கு இடம் கொடுத்த சம்பந்தனின் முகத்திரையை நேற்றுக் கிழி கிழியெனக் கிழித்து, உண்மைக் கோரமுகத்தை அம்பலப்படுத்தினார் புளொட் தலைவர் சித்தார்த்தன்.

ஆனால் சம்பந்தன் திருந்தவே மாட்டார். தமிழர்களின் ஏக தலைவன் தானே என்று காட்டுவதற்காக சித்தரின் முதுகைத் தடவிக் கொண்டு வருவார். இருந்து பாருங்கள்...!

தாம் கொண்டு வந்த விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்கே ஆப்படித்த பின்னரும், இன்னும் தனது தவறை தமிழ் மக்களிடம் – தமிழ்க் கூட்டமைப்பிடம் – குறைந்த பட்சம் தனது கட்சியான தமிழரசிடம் – ஒப்புக் கொள்ளாத, ஒப்புக் கொள்ளும் நியாய மனது அல்லாத – மூன்றாம் தர அரசியல் தலைவர் சம்பந்தன். அவர் அப்படித்தான் நடந்து கொள்வார்.

கூட்டமைப்புத் தலைவர்களின் கொள்கை விளக்கங்களும், மாறி மாறித் தாக்கும் வசைபாடல்களும், ஒற்றுமையீனமும், கூட்டுக்குள்ளேயே கால் வாரும் சின்னத்தனமும், பங்காளிக் கட்சிகளை கூட்டமைப்பாக வழி நடத்தும் திராணியற்ற தலைமையும், இது ஒரு கொள்கைக் கூட்டல்ல, தேர்தல் வெற்றிகளுக்கான சந்தர்ப்பவாதக் கூட்டே என்பதை படுபச்சையாக அம்பலப்படுத்தி நிற்கின்றன.

ஜெனிவாவுக்குத் தமிழர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது தமிழர்களின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் விடயத்துடன் தொடர்புபட்டது.

அதற்குக் கூட ஒன்றுபட்டு, கூட்டாக ஒரு நிலைப்பாடு எடுத்து, செயற்பட முடியாத கூட்டமைப்பினர், தேர்தலுக்கு வாக்குப் பெறுவதற்கு மட்டும் கூட்டமைப்பு என்று வேடமிட்டு, போலி ஒற்றுமையுடன் வருவது ஏன்? தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைத்து, தங்களுக்கு தங்களுக்கென்று வாக்குகளைச் சுருட்டத்தானே...!?

தேர்தலில் கூட்டமைப்பில் ஒன்றாக நின்ற ரெலோவும், புளொட்டும், தங்களை எதிர்த்து நின்ற விக்னேஸ்வரனுடன் போய் கூட்டுச் சேர்ந்து, செயற்படுகின்றன. கூட்டமைப்பின் குழப்பத்தை அம்பலப்படுத்திப் பிளவுபட்டு நிற்கின்றன.

நல்லது. அப்படி நில்லுங்கள். அதில் பிழையில்லை. தேர்தலின் போதும் அப்படி நில்லுங்கள்.

இன்று தமிழரசையும், சம்பந்தனையும், சுமந்திரனையும் போட்டுத் தாக்கி விட்டு, நாளைக்கு வெட்கமில்லாமல் அவர்களுடன் சேர்ந்து வாக்குப் புரட்ட எப்படி எங்களிடம் வருகின்றீர்கள்? உங்க வெட்கம், ரோசமில்லையா? அது உங்களுக்கும் இல்லை, இத்தனைக்கும் பின்னர் 'ஒற்றுமை' என்ற பெயரில் உங்களையும் சேர்த்துக் கொண்டு வாக்குப் பிச்சைக்கு வரப்போகின்ற தமிழரசுக்கும் இல்லை என்பதுதான் தமிழர்களின் துரதிர்ஷ்டம்.

தனிய – தன்னுடன் சேர்ந்தவர்களுடன் மட்டும் நின்று – தேர்தலை விக்கியினால் அணுக முடியும் என்றால், புளொட்டுக்கும் ரெலோவுக்கும் அது ஏன் முடியாது?

தமிழரசும் கூட, இனிமேல் தன்னுடன் ஓரணியில் நிற்கும் தரப்புகளுடன் மட்டுமே சேர்ந்து ஏன் தேர்தலை அணுகக் கூடாது?

தேர்தல் வெற்றிக்காக உள்கட்சிகளுக்குள்ளேயே காலை வாரும் பிரகிருதிகள்தான் நீங்கள் எல்லோரும்.

ஆகவே, இனி உங்கள் உங்களுடன் ஒன்றித்து நிற்போருடன் மட்டும் தேர்தல்களை எதிர்கொள்ளுங்கள். மக்களைச் சந்தியுங்கள் – நேர்மைத் துணிவிருந்தால். அதுதான் நியாயம்.

மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் பிறகு விடயங்களில் ஒன்றித்துச் செயற்படுவதற்கு ஒன்றுபட்டும் – இப்போது ஜெனிவாக் கடிதத்துக்கு விக்கியுடன் புளொட், ரெலோ ஒன்றுபட்டமை போல.

அதுதான் நீதியாகவும், முறையாகவும் இருக்கும். அதுதான் உண்மையாக ஒன்றுபட்ட செயற்பாடாக இருக்கும்.

தேர்தல் வெற்றிகளுக்காக மட்டும் ஒற்றுமை என்று இணைந்து, தமிழ் மக்கள் தலையில் மிளகாய் அரைப்பதை இத்துடன் நிறுத்துங்கள். ஒற்றுமையின் பெயரால் வென்றுவிட்டு, வேற்றுமையின் தெளிவை நாடகமாக தொடர்ந்து அரங்கேற்றுவதை இத்துடன் முடிவுக்கு கொண்டு வாருங்கள்.

அந்தத் துணிச்சல் கொஞ்சமும் நெஞ்சில் இல்லாத ரெலோவும், புளொட்டும் மேடையேறி எந்த நியாயம் பேசினாலும் அது எடுபடப் போவதில்லை.

பிரிந்து நின்று, பிளவுபட்டுச் செயற்பட்டு, மாறி, மாறி ஆளையாள் தாக்கும் ரெலோ, புளொட், தமிழரசுக்கு தமிழ் மக்களைத் தனித்துச் சந்திக்க துணிச்சல் இருக்கின்றதா?

அதை அவை ஒரு தடவை வெளிப்படையாக எடுத்துச் சொன்னால் நல்லது.

– மின்னல் –

## ஊரடங்கு தளர்வா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை கொரோனாப் பரவலில் சிவப்பு வலயத்தில் உள்ளது எனவும், இது பச்சை வலயமாக மாறும் வரையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இன்று நடைபெறும் கூட்டத்தில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும், சிறுவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கான வயதெல்லை தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 118 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்களும், 57 பெண்களும் உள்ளடங்கின்றனர்.

இதில் 12 ஆண்கள், 11 பெண்கள் என 23 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 95 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 49 ஆண்களும், 46 பெண்களும் அடங்குகின்றனர்.

## 12 வருட சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யோசேப் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

அங்கிருந்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் 2009.08.24 ஆம் திகதி பாரப்படுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் 2009ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு 21 மாதங்கள் இருந்தார்.

பின்னர் 2011ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து நீதிமன்றக் கட்டளைப்படி 10 மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டார். அங்கு அடிப்படை மனித உரிமைகள் வழக்குப் பதிவு செய்து 2012.03.24 அன்று புனர்வாழ்வு எனத் தீர்ப்பளிக்கப்பட்டு வவுனியா மருதமடு முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

ஒருவருட புனர்வாழ்வு நிறைவு செய்து 2013.03.24 அன்று விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர் 2013.07.11 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் மீண்டும் கைது செய்ப்பட்டு 4 ஆம் மாடிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து பூஸா முகாமுக்கு மாற்றப்பட்டு 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர். 2015. 01.02 நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அங்கு எந்த வழக்கும் பதிவு செய்யப்படாமல் அங்கிருந்து மகசின் சிறைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். 2013ஆம் ஆண்டில் இருந்து வழக்குகள் எவையும் இன்றி தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த நபர் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றினூடாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் மனைவி இவரின் விடுதலைக்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு 100 இற்கும் மேற்பட்ட கடிதங்களை அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது – என்றுள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 68 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)



# எந்தவொரு போர்க் குற்றங்களிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை!

## அடித்துக் கூறுகிறார் கஜேந்திரகுமார்




தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு எந்தவொரு போர்க் குற்றங்களிலும் ஈடுபடவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இன்று இடம்பெறும் சகல தமிழ் விரோத செயற்பாடுகளுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பே காரணம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். கடந்த புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை, அதனை நிரூபிக்கலாம் என்பதையே தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றோம். உண்மையான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எந்தவொரு போர்க் குற்றங்களிலும் ஈடுபடவில்லை.

ஒரு முழுமையான விசாரணை நடத்தினால் அதற்கு முகங்கொடுத்து அந்த இயக்கத்தின் நற்பெயரை உறுதிப்படுத்தலாம் என்பதையும் தமிழ் இனத்தின் நற்பெயரை உறுதிப்படுத்தலாம் என்பதையுமே தொடர்ச்சியாக உறுதிப்படுத்தி வருகின்றோம்.

இவ்வாறு விசாரணை ஒன்று நடந்தால், உண்மையும் அதன் பின்னணியும் வெளிப்பட்டால் எமது நியாயங்கள் உறுதிப்படுத்தப்படும். அதனையே நாம் கூறுகின்றோம்.

அத்துடன் இயக்கம் எனக் கூறிய நபர்களை அரசாங்கம் கொலைசெய்துவிட்டது, இப்போது எங்கே சென்று அவர்களை விசாரிப்பது, இன்று விசாரிக்கப்பட வேண்டியவர்கள் பிள்ளையான், கருணா, டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் போன்றவர்களையே விசாரிக்க வேண்டும்.

ஆகவே விசாரணை ஒன்று நடந்தால் புலிகளின் நற்பெயர் உறுதிப்படுத்தப்படும். இயக்கம் தவறிழைத்தது என்பது சுமந்திரன் மற்றும் அவர் சார்ந்த கட்சியின் நிலைப்பாடாகும்.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், அதுமட்டுமல்ல பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்று எந்தவொரு சட்டமும் புதிதாக கொண்டுவரவும் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

இதனிடையே, இன்று இடம்பெறும் சகல தமிழ் விரோதச் செயற்பாடுகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணமாகும்.

மனித உரிமைகள் பேரவையில் கூட உள்ளக பொறிமுறையை வலியுறுத்தியுள்ள நிலையில் அதனை வரவேற்று உலகத்துக்கு சொன்னது மட்டுமல்லாது எமது மக்கள் மத்தியில் பொய்யை திணிக்க நடவடிக்கை எடுக்கின்றனர்.

மக்கள் தொடர்ந்தும் ஏமாறக்கூடாது என்பதற்காகவே மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 6 ஆயிரம் ரூபாவுக்கு மஞ்சள் தூள் விற்பனை

*சந்தைகளில் தற்போது ஒரு கிலோ மஞ்சள் தூள் 6 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.*

*இதனால் நுகர்வோர் தற்போது பெரும் அவல நிலையை எதிர்நோக்கியுள்ளனர் என அந்த அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.*

*தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'மக்கள் 50 மற்றும் 100 கிராமில் மஞ்சள் தூளை வாங்குகிறார்கள், அதன்படி அவர்கள் சுமார் 100 முதல் 600 ரூபா வரை செலவழிக்க வேண்டியுள்ளது.*

*சில நிறுவனங்கள் 20 கிராம் மஞ்சள் தூளை சுமார் 170 ரூபாவிற்கு விற்பனை செய்கின்றன. இந்நிலையில், அரசு இதில் கவனம் செலுத்தி மக்களுக்குக் குறைந்த விலையில் மஞ்சள் தூளை வழங்கும் திட்டத்தை வகுக்க வேண்டும்' என அவர் கோரியுள்ளார்.*

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் பொய் கூறினார் சிறைச்சாலை ஆணையர்!

## அவர் பதவியில் நீடிப்பது எப்படி?



அநுராதபுரம் சிறையில் வைத்து தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு அமைச்சுப் பதவியை லொஹான் ரத்வத்தே இராஜினாமா செய்துள்ள நிலையில், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய எவ்வாறு தனது பதவியில் தொடர்கிறார் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

'இந்தச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய மற்றும் சிறைச்சாலை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்கவிடம் ஊடகங்கள் கேள்வி எழுப்பியிருந்தன.

எனினும், அவ்வாறான சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்றே அவர்கள் கூறியிருந்தனர். இந்நிலையில், லொஹான் ரத்வத்தேயின் இராஜினாமா, துஷார உபுல்தெனிய மற்றும் சந்தன ஏக்கநாயக்க ஆகியோர் இந்த சம்பவத்தை மூடிமறைக்க வேண்டுமென்றே ஊடகங்களுக்கு பொய் சொன்னதை தெளிவுபடுத்தியுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை அவருக்கு முன் மண்டியிடச் செய்துள்ளார்.

அத்துடன், அவர்கள் மீது துப்பாக்கியைக் காட்டி அந்த இடத்திலேயே கொலைசெய்து விடுவேன் என அச்சுறுத்தியுள்ளார். இந்தச் சம்பவம் ஊடகங்களில் வெளியான பிறகு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, லொஹான் ரத்வத்தேவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யுமாறு கோரியிருந்தார்.

இந்நிலையில், அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அண்மையில் நடந்த சம்பவத்தால் 'அரசுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாமல் தடுக்க விரும்புகிறேன் என - அவர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# மன்னார் கடற்படுகையில் எண்ணெயை ஆராய்வதே இலங்கை வெளிநாட்டுக் கடனிலிருந்து மீள ஒரே வழி!

## எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஆலோசனை



இலங்கை எதிர்கொள்ளும் வெளிநாட்டுக் கடன் நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி மன்னார் கடற்படுகையில் எண்ணெய் மற்றும் எரிவாயுவை ஆராய்வது தான் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை தற்போது 4,700 கோடி பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கடன்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள சிறப்பு விருந்தினர் அறையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

மன்னார் பேசினில் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு வைப்புகளை ஆராயும் தொழில்நுட்பம் இலங்கையில் இல்லாததால், தற்போது சர்வதேச முதலீட்டாளர்களின் உதவியைப் பெற கவனம் செலுத்தப்படுகிறது.

இலங்கையின் மன்னார் கடற்படுகையில் தற்போது எம் - 2 என அழைக்கப்படும் பரக்குடா பகுதியில் 200 கோடி பீப்பாய்கள் கச்சா எண்ணெய் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 15 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள்.

அத்துடன், இந்த பேசில் 9 டிரில்லியன் கன அடி வாயு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றின் மதிப்பு 1,700 கோடி அமெரிக்க டொலர்கள் ஆகும். எனவே, இந்த பெற்றோலியம் மற்றும் எரிவாயு விற்பனையிலிருந்து நாம் 16,700 கோடி அமெரிக்க டொலர்களை சம்பாதிக்க முடியும்,

இது நமது நாட்டின் மொத்த வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும்போது 12 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை மீதப்படுத்தும் என அமைச்சர் உதய கம்மன்பில கூறியுள்ளார்.

இலங்கையில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களை ஆராய்வது ஒரு முக்கியமான தருணத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் பெற்றோலிய மேம்பாட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு பெற்றோலிய மேம்பாட்டு ஆணையம் இதற்காக நிறுவப்படும் என்று அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# இந்திய வெளியுறவு செயலரை சந்தித்தார் மிலிந்த மொரகொட



இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவை கடந்த புதன்கிழமை, புதுடெல்லியில் உள்ள வெளியுறவு அமைச்சகத்தில் சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு, புதிதாக வருகை தந்த இராஜதந்திர தூதுவர்கள், இந்திய வெளியுறவுச் செயலாளரை சந்திக்கும் நடைமுறைக்கு ஏற்ப இருந்தது.

இந்த கலந்துரையாடலின் போது, இருவரும் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களைப் பற்றி விவாதித்துள்ளனர்.

உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட மொரகொட, நம்பிக்கையை வளர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக மக்களிடையே தொடர்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொலிஸ் போக்கே இப்படித்தான்!

**தூங்குபவனை எழுப்பலாம், தூங்குபவன் போல நடிப்பவனை எழுப்ப முடியாது என்பர்.**

**அடாத்துமுறையில், அகால வேளையில், சிறைகளுக்குள் புகுந்து அட்டகாசம் பண்ணி, கைதிகளை முழந்தாளில் நிற்க வைத்து, துப்பாக்கியை நீட்டி அராஜகம் செய்த அமைச்சர் லொஹான் ரத்வத்தை விடயத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் நடிக்கின்றது கோட்டா அரசு. அதனால் அதனைத் தூக்கத்தில் இருந்து எழுப்ப முடியாது என்பது தான் உண்மை.**

**சிறைக்குள் துப்பாக்கியைப் பயன்படுத்தி அச்சுறுத்தியமை மிக மோசமான கிரிமினல் குற்றம். அதற்கு யாரேனும் முறைப்பாடு செய்வார்களேயானால் நடவடிக்கை எடுப்பார் என்கின்றார் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரா. யார் காதில் அவர் பூச்சுற்றுகின்றார்?**

**தாய் மகனைக் கண்டித்து, அடித்து, அதனால் காயம் ஏற்பட்டு, ஆஸ்பத்திரிக்கு வந்தாலே பொலிஸ் வந்து விடும் – தாயைக் கைது செய்ய. காயமடைந்த மகனோ, வேறு யாரோ வந்து முறைப்பாடு செய்யும் வரை பொலிஸ் பார்த்திருப்பதில்லை. தாய் – மகன் உறவு முறை நெருக்கம் கூடக் கணக்கெடுக்கப்படுவதில்லை.**

**அதுவும் பகிரங்கமாகப் பிஸ்டலைக் காட்டி அச்சுறுத்திய விடயத்தில் முறைப்பாடு வரும் வரையில் காத்திருக்கின்றாராம் பொதுஜனப் பாதுகாப்பு அமைச்சர். மக்களை அவர் என்ன கேனயன்கள் – முட்டாள்கள் – என்று நினைத்துக் கொண்டிருக்கின்றாரோ?**

**நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் அரசியல் கைதிகள். தமது விடுதலைக்காக அரசின் கருணையை இறைஞ்சிக் காத்திருப்பவர்கள். அரசின் அமைச்சர் ஒருவர் சிறைக்குள் புகுந்து அடாவடித்தனம் பண்ணியமைக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்தால், தாங்கள் நிரந்தரமாக சிறைக்குள் வாட வேண்டியது தான், அதற்குப் பிறகு விடுதலைக்கு வாய்ப்பே இல்லை என்ற அவர்களின் அவல நிலைமை அமைச்சர் சரத் வீரசேகரவுக்குத் தெரியும். தங்களின் ஆத்ம கௌரவத் துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைச் சகிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதால் அவர்கள் முறையிட மாட்டார்கள். அதனால் விசாரணை நடத்தத் தேவையில்லை, தங்களின் சக அமைச்சரை – கைது செய்ய வேண்டி வராது என்ற நம்பிக்கையில் – துணிச்சலில் – இப்படி விதண்டாவாதம் பேசுகின்றார் அமைச்சர் வீரசேகரா.**

**இத்தகைய கிரிமினல் குற்றம் தொடர்பில் விசாரணையை ஆரம்பிப்பதற்கு முறைப்பாடு அவசியமில்லை என்பதைப் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் அறிந்திருக்கவில்லையா?**

**சரி, முறைப்பாடு இருந்தால்தான் விசாரணைகளை ஆரம்பிப்பார் என்றால், சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளது.**

**இனிமேலும் பார்த்திராமல், விசாரணைகள் விரைந்து முன்னெடுக்கப்படுவதையும், குற்றம் இழைத்தோர் கைது செய்யப்பட்டு, உரிய வகையில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுகின்றமையையும் அமைச்சர் வீரசேகரா உறுதி செய்வாரா?**

**அந்த விசாரணையில், இத்தகைய பாரதூரமாக சம்பவம் நடந்த பின்னர், அது குறித்து பொலிஸுக்கு முறைப்பாடு செய்யாமல் மறைத்த சிறை அதிகாரிகளையும் கூட கைது செய்து விசாரணை செய்ய வேண்டியிருக்கும்.**

**ஆனால் அதையெல்லாம் இப்போது சட்டத் தத்துவங்கள் பேசி, அதிகம் உபதேசம் செய்யும் சரத் வீரசேகராவின் பொலிஸ் தரப்பு செய்யப்போவதில்லை. ஏனென்றால் பொறுப்புக் கூறல் என்பது எதிரணிக்கு மட்டுமே உரியது, தங்களுக்குரியதல்ல என்ற பேரினவாத வெறிப் போக்கில் மிதக்கும் அவர்களின் சித்தாந்தம் அப்படித் தான் அவர்களை வழிப்படுத்தி நிற்கும். அதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை என்பதுதான் உண்மை.**

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை நிராகரிக்கவே முடியாது!

## செல்வம் எம்.பி. கருத்து

கடந்த ஐ.நா.சபையின் அறிக்கை என்பது மிகவும் ஒரு முக்கியம் வாய்ந்த காத்திரமான அறிக்கையாக அமைந்திருந்தது. மக்களும் அதனை வரவேற்ற நிலையில் தற்போதைய ஆணையாளரின் அறிக்கை என்பது மிகவும் கவலை தரக்கூடிய விடயமாக அமைந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரிக்க முடியாது. ஆனால் கவலையளிக்கின்றது.

அந்த அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தால் கூறப்பட்ட விடயங்கள் குறிப்பாக இலங்கை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்த முடியாது எனத் தெரிவித்த விடயங்கள் மீண்டும் ஒத்துழைக்கத் தயார் என்று கூறப்படுகின்ற நிலையில் கூறப்பட்ட விடயங்களுக்கு மாறாக எமது தமிழ்ப் பிரதேசங்களில் பல்வேறு அத்துமீறல்கள் நடந்து கொண்டு உள்ளமையை நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

அந்த விடயம் சம்பந்தமான கருத்துக்கள் கூறப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது. மேலும் அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆணையாளரின் அறிக்கையில் இடம் பெறவில்லை என்பது மிகவும் கவலையளிக்கிறது.

இந்த நாட்டில் இடம்பெறும் இராணுவ ஆட்சி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, ஆசிரியர்களின் போராட்டம் இவை அத்தனையும் ஒரு பிரச்சினையாகக் கூறப்பட்டுள்ளதே தவிர, அரசாங்கம் அவற்றை எல்லாம் உடனடியாகத் செய்ய வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும் என்கிற உத்தரவு அந்த அறிக்கையில் இல்லாமல் இருப்பது கவலையளிக்கிறது.



கடந்த ஐ.நா.சபையின் அறிக்கை என்பது மிகவும் ஒரு முக்கியம் வாய்ந்த காத்திரமான அறிக்கையாக அமைந்திருந்தது. மக்களும் அதனை வரவேற்ற நிலையில் தற்போதைய ஆணையாளரின் அறிக்கை என்பது மிகவும் கவலை தரக்கூடிய விடயமாக அமைந்துள்ளது.

குறித்த அறிக்கையின் ஊடாக நாங்கள் எதிர்பார்க்கின்ற சர்வதேசம் என்கிற விடயம் கை விட்டு போய் விடுமோ? என்கின்ற கேள்விளங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அறிக்கையில் எமது பல பிரச்சினைகள் தொடர்பாக மேலோட்டமாகக் காட்டப்பட்டுள்ளது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு நிலைப்பாட்டை இந்த அறிக்கை சொல்லவில்லை. அதனை விட இலங்கை அரசாங்கத்தை நம்புவதாகவும், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் நல்லதொரு மனிதர் என்கின்ற போர்வையில் அவரை புகழ்ந்து பேசுகின்ற ஒரு நிலையும் அரசாங்கத்துக்கு கால அவகாசத்தை வழங்குகின்றது போன்ற ஒரு நிலையும் காணப்படுகிறது.

இந்த ஜனாதிபதியும், அரசாங்கமும் இருக்கும் வரை தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை. கால தாமதத்தை ஏற்படுத்துகின்ற வாய்ப்பாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் ஜனநாயகம் சாகடிக்கப்பட்டதால் தான் அமைச்சர் பதவியை இழப்பதற்கான நிலை உருவானது



ஜனநாயகம் சாகடிக்கப்பட்டதால் தான் இராஜாங்க அமைச்சர் பதவி இழப்புக்கான நிலை உருவானது என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச ஜனநாயக தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர் கி.வசந்தரூபனின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இளைஞர்களுடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் ஜனநாயகம் இருக்கின்றதா என்ற கேள்வி ஒரு தமிழ்த் தரப்பாக இருந்து பார்க்கின்ற போது எங்களை கேள்வி கேட்க வைக்கும். இலங்கை ஜனநாயக நாடு. தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலில் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகிறார்கள். பல்வேறு வகையான தேர்தல் முறைகள் இருக்கின்றன. இதை வைத்துக்கொண்டு தான் இந்த நாடு ஜனநாயக நாடு என்கின்றோம்.

ஆனால், தனியே ஒரு தேர்தலை நடத்தி ஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றது என்று சொல்வது சரியல்ல. இந்த நாட்டில் ஏனைய மொழி பேசும் மக்களையும் அரவணைத்து எவ்வாறு கொண்டு செல்கிறார்கள்.

அடுத்தவனுக்குரிய உரிமையை எவ்வாறு இந்த நாடு பகிர்ந்துக்கொள்கிறது. அந்த அடிப்படையில் தான் இந்த நாட்டின் ஜனநாயகம் தங்கியுள்ளது. அத்துடன், எல்லோருடைய அழுத்தங்கள் மற்றும் வற்புறுத்தல்களுக்கு மத்தியில் அமைச்சர் பதவி விலகி இருக்கிறார்.

சர்வதேச ரீதியில் அவர்களுக்கு கிடைத்த அவமானங்களின் அடிப்படையில் அவர் தனது பதவியினை இராஜினாமா செய்துள்ளார். இங்கு கூட ஜனநாயகம் சாகடிக்கப்பட்டதால் தான் இராஜாங்க அமைச்சருக்கு பதவி இழப்புக்கான நிலை உருவானது.

சிறையில் சென்று தமிழ் அரசியல் கைதிகளை முழங்காலிட வைத்து துப்பாக்கி முனையில் கொல்லுவேன் என முனைந்த அந்த வெறி பிடித்த, ஜனநாயக வாதிகள் என தம்மை சொல்பவர்கள் இன்று ஜனநாயகத்தை குழி தோண்டிப்புதைத்துள்ளார்கள். இது கண்ணுக்கு முன்னால் பார்க்கும் ஜனநாயகம். இதைவிட இந்த நாட்டில் பல்வேறுபட்ட ஜனநாயக மீறல்களும், ஜனநாயகத்தை மதிக்காத தன்மைகளும் இப்போதும் தொடர்கின்றன.

எல்.எல்.ஆர்.சி. அறிக்கை, பரணகம அறிக்கை வந்தாலென்ன, இந்த அரசாங்கம் தாமே விசாரிப்பது என்று சொன்னால் என்ன? எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு ஜனநாயகம் என்ற பெயரில் ஒரு சர்வாதிகாரத்தையும், இராணுவத்தைக் கொண்டு செல்லும் ஒரு நாடாகவும் இலங்கை இருக்கிறது. இதுவே இங்குள்ள ஜனநாயகம் எனத் தெரிவித்துள்ளார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் -78

ந.வித்தியாதரன்


எம்.ஜி.ஆரும் இராஜதுரையும்.

ஒரு பத்திரிகை இமயம் பற்றிய தொடர் இது. அவரது நூற்றாண்டு ஜயந்தி தினத்தையொட்டி ஆரம்பிக்கப்பட்ட – அவர் நினைவை மீட்கும் – பதிவும் கூட. இதில் அரசியல் சர்ச்சைகளில் சிக்கிக் கொள்ள அல்லது அவரை மையமாக வைத்து அரசியல் வாதப் பிரதிவாதங்களை உருவாக்க நான் விரும்பவில்லை.

ஆனால் ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவின் எழுத்துப்பணி அந்த காலகட்டத்தின் அரசியல் போக்கிலிருந்து விலகி நின்றதல்ல. இரண்டறக் கலந்தது. ஆகவே அந்த அரசியல் தொடர்பாடலை அவ்வப்போது தொட்டுச் செல்வது என்பது தவிர்க்க முடியாத கட்டாயம். அந்த வகையில் இந்த வாரம் ஒன்று.

சிவநாயகம் ஐயாவின் வாழ்க்கையில் கடைசி வரை பிரிக்க முடியாத நண்பராக இருந்தவர் செல்லையா இராஜதுரை. அந்தத் தலைமுறையில், அவர்கள் வட்டத்தில், இப்போதும் உயிருடன் வாழ்பவர் அவர் மட்டுமே என்று கூறலாம். வயது 95. இலங்கை அரசியலை – பொது வாழ்வை – சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் துறந்துவிட்டு, அமைதியாகத் தமது ஓய்வுக் காலத்தை சென்னையில் கழித்துக் கொண்டு இருக்கின்றார். அவர் நேற்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

தமது ஆப்த நண்பர் சிவநாயகம் பற்றிய கட்டுரை என்பதால் கடந்த 77 தினங்களாக ஒரு நாள் விடாமல் இந்தத் தொடரைத் தான் படித்து வருகின்றார் என்றார். கட்டுரையில் சிவநாயகம் அவர்கள் பற்றிக் கூறப்பட்டவை எல்லாம் உண்மை, பாராட்டத் தகுந்த பதிவு என்றார்.

கட்டுரைகளுக்கு இடையில் இப்போது சிவநாயகம் குறித்து மற்றவர்கள் எழுதிய விடயங்களும் வெளியிடப்படுகின்றமையால் தாமும் சிலவற்றைக் குறிப்பிட வேண்டும் என்றார் அவர்.

*“எனக்கு இப்போது வயது 95. அந்த தலைமுறையில் – தந்தை செல்வா, வன்னியசிங்கம், இராஜவரோதயம் போன்ற தலைவர்களுடன் – நெருங்கிப் பழகியவர்களில் நான் மட்டும்தான் இன்னும் உயிருடன் இருக்கின்றேன் என்று நினைக்கிறேன். சிவநாயகம் அண்ணன் குறித்து எனக்கும் நினைவுகளை மீட்கப் பல விடயங்கள் உண்டு. ஆனால் என் வயது மூப்பு காரணமாக அவற்றை எழுதி அனுப்ப இயலவில்லை. உங்களுடன் பேச்சில் பரிமாறிக் கொள்கிறேன்” – என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார் அவர்.*

*“எனக்கு சிறுவயதிலிருந்தே சிவநாயகம் அண்ணனை நன்கு தெரியும். அவரை ‘அண்ணன்’ என்றே அழைப்பேன். என்னை வழிப்படுத்திய – நெறிப்படுத்திய – வழிகாட்டி அவர்தான். மட்டக்களப்பில் பகுத்தறிவுக் கழகத்தை அவர் ஆரம்பித்த போதும் அதில் என்னையும் இணைத்துக் கொண்டார். கழகத்தின் அச்சாணி அவர்தான். அவரைச் சுற்றி நாங்கள் வலம் வந்தோம். மட்டக்களப்பு இளைஞர்களிடையே சுயமரியாதையை பேணும் பண்பியல்பை அவர் நிலைநிறுத்தினார். பகுத்தறிவுக் கழகம் மூலம் சமூகத்தை நெறிப்படுத்தும் உயரிய பணியை முன்னெடுத்தார்.*

*“அவர் சுதந்திரனில் இணைந்தபோது என்னையும் சேர்த்து வைத்துக் கொண்டார். அதன் மூலம் இலங்கை தமிழரசின் உணர்வை எங்கள் இரத்தத்தில் பாய்ச்சினார். அவரால் தமிழரசு வளர்ந்தது. தமிழரசுடன் சேர்ந்து நாங்களும் வளர்ந்தோம்.*

*“என்னுடைய அரசியல் திறமையை நான் அறிய முன்னரே இனம் கண்டவர் அண்ணன்தான். அவர்தான் என்னை அரசியலுக்குள் நுழைத்தவர். அவர் ஒரு சிறந்த பேச்சாளர். நான் பிற்காலத்தில் ‘சொல்லின் செல்வன்’ என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் என்னிடம் தமிழ் சொல்லாட்சி – உரையாற்றும் திறன் – இருப்பதாக முதலில் அடையாளம் கண்டு, அந்தத் திசையில் நான் வளம்பெற – மேம்பட – ஊக்குவித்துப் பாடம் போல அதனைப் போதித்து நெறிப்படுத்தியவர் சிவநாயகம் அண்ணன்.*

*“கொழும்பில் சுதந்திரனில் இருப்பதோ, வடக்கில் அரசியல் செய்வதோ நான் அரசியலில் பணியாற்றுவதற்கு உரிய தளம் அல்ல என்று அன்றே கண்டு கொண்டு, மட்டக்களப்புக் களத்துக்குச் சென்று அங்கிருந்து அரசியல் செய்ய வழிப்படுத்தித் தூண்டியவர் அவர்தான். அதையும் அவர் நெறிப்படுத்தினார்.*

*“எனது பேச்சு, செயல் திறமைகளை வைத்து மட்டக்களப்பில் – கிழக்கில் – தமிழரசை நிலைநிறுத்த அவர் பெரிதும் உழைத்தார். எனக்கு பக்கபலமாக – காவலன் போல – தமது ஊடக நண்பரான இரா. பத்மநாதனையும் கூடவே அனுப்பி வைத்தார்.*


ஆர்.எம்.வீரப்பனுக்குக் கைலாகு கொடுக்கும் சிவநாயகம் ஐயா. நடுவில் செல்லையா இராஜதுரை.

*“நான் இப்போது அதிகம் அரசியல் பேச விரும்பவில்லை. நாங்கள்தான் தமிழரசை வடக்கு, கிழக்கில் நிலை நிறுத்தினோம். சாதாரண – ஓரளவு படித்த மனிதர்களாகிய – நாம் அதனைச் செவ்வனே முன்னெடுத்தோம். ‘முன்னால் வந்த காதைப் பின்னால் வந்த கொம்பு மறைப்பது போல’ சிவநாயகம் அண்ணனின் ஆசிர்வாதம், உதவியுடன் பின்னாள்களில் கட்சிக்குள் நுழைந்த – மெத்தப் படித்தவர்கள் – கறுப்பு அங்கி அணிந்தவர்கள் – எங்கள் முதுகில் குத்திய போதும், எனக்கும் அந்தச் சமயங்களிலும் பக்கபலமாக நின்றவர் சிவநாயகம் அண்ணன்தான்.*

*“அதன் பின்னர் நடந்தவை எல்லாம் மக்களுக்குத் தெரியும். அச்சமயத்தில் என்னுடன் பக்கபலமாக இருந்தவர் – எனக்குத் தெம்பு தந்தவர் – சிவநாயகம் அண்ணன் மட்டுமே. அவரே பின்னர் மாற்று வழியில் நான் அரசியலில் தொடர்வதற்கும், என் மக்களுக்குப் பணியாற்றுவதற்கும் பலமாக நிற்பதற்குமான வழியையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.*

*“எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் நட்புறவை ஏற்படுத்தி, அதை வலிமைப்படுத்தியவர் அவர்தான். நடிகவேள் எம்.ஆர்.ராதாவால் எம்.ஜி.ஆர். சுடப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்த போது நான் இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினன். அச்சமயம், அச்சம்பவம் நடந்ததும் சிவநாயகம் அண்ணன் என்னுடன் தொடர்பு கொண்டார். உடனடியாக தமிழகம் சென்று வைத்தியசாலையில் எம்.ஜி.ஆரை நேரில் பார்த்துச் சுகம் விசாரித்து, தமது அன்பையும் தெரிவிக்கும்படி கூறினார். அவரின் வழிகாட்டுதல் படி நான் தமிழகம் விரைந்தேன். எம்.ஜி.ஆரை வைத்தியசாலையில் பார்த்து நலம் விசாரித்தேன். அச்சமயம் இலங்கையிலிருந்து தேடிச்சென்று அவரை சுகம் விசாரித்த ஒரே பிரமுகர் நான் மட்டுமே. அது எம்.ஜி.ஆரின் மனதில் ஆழமான நட்பாக பதிந்தது. பின்னாளில் நான் இலங்கையில் இந்து கலாசார விவகாரங்களுக்கான முதலாவது அமைச்சராகப் பதவியேற்ற போது அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் மூலம் ஏற்பாடு செய்து என்னை தமிழகத்துக்கு அழைத்து, அரசு வரவேற்பு அளித்து, கௌரவித்தார் எம்.ஜி.ஆர்.*

*“யார் யாரோ எல்லாம் வந்து தமிழரசு இரத்தம் ஓடுவதாக இன்று காட்டிக் கொள்கின்றார்கள். தமிழரசுக் கட்சியில் ஊறி, அதையும் வளர்த்து, நாங்களும் வளர்ந்தோம். ஆனால் அதில் பின்னால் வந்து இணைந்தவர்கள் எங்கள் முதுகில் குத்தி, எங்களையே வெளியே அனுப்பினார்கள். ஆனால் சிவநாயகம் அண்ணனும் தந்தை செல்வாவும் ஊட்டிய தமிழரசு இரத்தமும் எண்ணமும்தான் இன்றும் எங்கள் உடலில் ஓடிக் கொண்டிருக்கின்றன”* – என்று பழையனவற்றை நினைவுகூர்ந்தார் செல்லையா இராஜதுரை

அவருக்கு வயதாகிவிட்டது. எனினும் நினைவாற்றல், சொல்லாட்சி தாராளமாக உள்ளன. ஒரு காலத்தில் ‘சொல்லின் செல்வர்’ என்று மதிக்கப்பட்டவர் அல்லவா?

எங்களுடைய இளமைக் காலத்தில் நாம் கண்ட இராஜதுரையும் அமிர்தலிங்கமும் வேறு. வசீகரத் தோற்றம் கொண்ட இராஜதுரையின் பேச்சுக்காகத் தமிழரசுக் கூட்டங்களில் மக்கள் திரண்டு காத்திருப்பர்.

ஒருபக்கம் அமிர்தலிங்கத்தின் எழுச்சிமிக்க முழக்கம் என்றால், மறுபுறம் அழகும் சொல்லாடலில் ஆற்றொழுக்கான பிரவாகம் எடுத்து வரும் சொல்லின் செல்வர் இ.ராஜதுரையின் அருமையான பேச்சு. ஒருவர் வடக்கிலிருந்து. மற்றவர் கிழக்கிலிருந்து.

இருவரையும் தமிழரசின் – தந்தை செல்வாவின் – இரட்டைக் குழல் துப்பாக்கி என்றோம். தந்தையின் மறைவோடு இரட்டைக் குழல் துப்பாக்கி பிளந்தது. தமிழரின் அகிம்சை வழி விடுதலைப் போராட்டமும் ஆயுத வழிக்கு திரும்ப, எல்லாம் தலைகீழாகின.

இப்போது ஆயுத வழிப் போராட்டம் முடிந்துவிட்டது. மீண்டும் அகிம்சை வழிப் போராட்டம். தமிழரசே அதில் பிரதான பாத்திரம். ஒரே ஒரு வித்தியாசம். கறையான்கள் புற்று எடுக்க கொடிய விஷ நாகங்கள் அதில் குடிகொண்ட மாதிரியாகிவிட்டது தமிழரசு பாசறை. அதுதான் கவலைக்கும் விசனத்துக்கும் உரியது.

(வளரும்.....)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 133

**361. நாடு கடந்த அரசு யதார்த்தமில்லை என்கிறீர்களா?**

யதார்த்தம் என்பது ஒரு காரியத்தை தொடங்கமுன் அதனை செய்யவிழைபவர்கள் ஆராய வேண்டிய விடயம். அவற்றில் சம்பந்தப்பட்டுள்ள நுணுக்கங்கள், அவை தரக் கூடிய பலாபலன்கள் பற்றி அவர்கள்தான் அறிந்திருப்பார்கள் – அவை, அது சம்பந்தப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை தருபவையாக இருக்கவேண்டும்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய காலம் தொட்டு நடந்து, கடந்து வந்த பாதைகளை மீள் தூக்கிப் பார்த்தால், அது ஒரு வழியில் யதார்த்தத்தைப் புரிய வைக்கும். நடப்பனவையை ஒட்டி



14ஆவது தலாய் லாமா

ஒரு பார்வையாளனாக, அந்த வரலாற்றுக் குறிப்பை தருகிறேனேயொழிய, அது அப்படியாக வேண்டும் என்றோ, அதன் பலாபலன்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணப்பாங்கிலோ அல்ல. ஈழத் தமிழரின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று, அதனில் கரிசனை காட்டிய நாள்களிலிருந்து அங்கலாய்த்தமை போல், போருக்குப் பிறகான ஆதங்கங்கள் வெகுவாக வளர்ந்தன. அவற்றில் ஈடுபட்ட அனுபவங்களிலிருந்தும் சில கருத்துக்களை முன்வைக்கிறேன். அவ்வளவே.

திபெத்திலிருந்து 1959ஆம் ஆண்டில் அதன் 14 ஆவது தலாய் லாமா சீனாவினால் தனது நாடு ஆக்கிரமிக்கப்பட்டதால் வெளியேறி, இந்தியாவில் தஞ்சமடைந்து, நாடு கடந்த அரசை அமைத்து, அறுபதுக்கு மேலான ஆண்டுகள் ஆகியும், எந்த நாடும் அந்த அரசை அங்கீகரிக்கவில்லை. 1959 இலிருந்து லட்சக்கணக்கான திபெத்தியர்கள் வேட்டையாடப்பட்ட பின்பும் சீனா அதன் பிரதேசங்களைத் தனதாகவே பாவித்து, மதச் சின்னங்களைக் கூட அழித்தபோதும், எத்தனையோ நாடுகளின் தலைவர்கள் தலாய் லாமாவை கத்தோலிக்கத் திருச்சபையின் பாப்பாண்டவருக்கு இணையாக மதித்து வரவேற்றார்கள், ஆனாலும் சீனாவுக்கு எதிராக இவ்வளவு வருடங்களும் எந்த ஒரு நாடும் தனியாகவோ, கூட்டாகவோ சினந்து எழவில்லை. தனித்துவ ஆட்சி காண விரும்பிய தலாய் லாமா "திபெத்து சீனாவின் ஓர் அங்கம் என்பதை ஒப்புக்கொள்கிறோம், ஆனால் எங்கள் பண்பாடு, ஆன்மிகமான வாழ்வு, நாங்கள் கடைப்பிடிக்கும் வாழ்க்கை நெறிகள், சுற்றுப்புறத்தோடு நாங்கள் கொண்டிருக்கும் புறச்சூழலுக்கு பங்கம் இல்லாமல் மாநில சுயாட்சி கொடுத்தாலே போதும்" என்று கையேந்தி கேட்கிறார்.

சீனாவோ அதைப்பற்றி எந்தக் கணக்கும் எடுக்க மறுக்கிறது.

இடைப்பட்ட வருடங்களில் ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா என்ற நாடுகளிலெல்லாம் மனித உரிமை மீறல்கள் என அரசாங்கங்களைக் கவிழ்த்து ஆதாயம் தேடிய அமெரிக்கா, சீனாவுக்கு எதிராக சிந்திக்கவும் தயாராக இல்லை. தங்களது வர்த்தகச் சமநிலை பாதிக்கப்படாமல் இருப்பதிலேயே மேற்கு வலய நாடுகள் கவனமாக இருந்தன. தற்போது, அந்த வர்த்தக சமநிலை சீனாவின் பக்கம் சாயும்போது இந்தியாவுடனும் சேர்ந்து துள்ளிக் குதிக்கின்றன.

அதனால் இப்பொழுதும் ஒரு சுதந்திர திபெத்து உருவாகுமா என்பது கேள்விக் குறியே. தலாய் லாமாவுக்கு நாடு கடந்த அரசை அமைத்து, அதனைப் பாதுகாக்கும் இந்திய அரசு, அப்படியான அனுசரணையை ஈழத்தமிழர்களுக்கு செய்யவுமில்லை, நாங்கள் அதனை 1977ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கிக்கொள்ளவுமில்லை, பின்னர் முரண்டும் பிடித்து நிற்கிறோம்.

இன்று எழுந்திருக்கும் சீனாவின் நிலையால் இந்தியாவுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தேவையாக இருக்கின்றன என்று தமிழ் மக்கள் எண்ணுகிறார்கள். அது நிதர்சனம். ஆனால் அதற்காக நாங்கள் கேட்பதை அவர்கள் செய்துதான் ஆகவேண்டும் என்பது அபத்தம். இந்த நிலையிலிருந்து எப்படியான முறைகளில் நாம் வழிகள் அமைத்து முன்னேற வேண்டும் என்பதுதான் முக்கியம்.

**362. எத்தனையோ கட்டமைப்புக்கள் போரின் பின்பு உருவாக, பாதை என்பது குழப்பமாக இருக்கிறதே?**

புரிந்து கொள்கிறேன். அதனை மக்கள்தான் தெரிந்து, தமக்கு எது பயன் தரும் என்ற வழியில் பயணிக்க வேண்டும். வழித்துணைகளையும், வழிகாட்டல்களையும் பேதம் புரிந்து நம்பிக்கை கொள்ளவேண்டும். எனது நண்பர் கந்தசாமி அடிக்கடி சொல்லுவார். "இடக்கை செய்வதை இடக்கை செய்ய வேண்டும், வலக்கை செய்வதை வலக்கை செய்ய வேண்டும். ஒன்று மாறி மற்றது செய்யப் புறப்பட்டால் குழப்பம்தான்" – என்று.

நாங்கள் முன்னைய நாள்களில் பெரும் குடும்பங்களாக இருந்தபோது வருடப் பிறப்பு, தீபாவளி நாள்களில் எமது பெற்றோர் புதிய உடைகள் வாங்கித் தந்து அவற்றை அணிந்து கோவில், உற்றார், உறவினர்கள் வீடுகளுக்குப் போவோம். அதேசமயம் அன்பு காரணமாக எமது மாமா, மாமி, சித்தி, சித்தப்பா போன்றோரும் எமக்கு உடைகள் வாங்கிப் பரிசளிப்பது வழமை. அவர்கள் அன்பாகத் தந்தது என்பதற்காக எல்லா உடைகளையும் ஒரேநேரத்தில் அணிந்து கொண்டு வெளியே போனால் எம்மைக் கோமாளிகளாகத்தான் பார்ப்பார்கள். தமது அக்கறைகள் காரணமாக ஒரு சிறு இனமான, அதேசமயம் நாட்டுக்கு நாடு பிரிந்து, பரந்து இருக்கும் போது, இவ்வளவு கட்சிகளையும், அமைப்புகளையும் உள்வாங்கி, ஈழத்தில் எமது உரிமைக்கும் விடுதலைக்கும் போக சர்வதேசம் எங்களை கோமாளிகளாகத்தான் பார்க்கிறது. ஆனாலும் பொது அடிப்படையில் ஒற்றுமையென்பது வருவதாகவே தெரியவில்லை.

நாங்கள் இளைஞர்களாக ஸ்ரீலங்காவில் இருந்த நாள்களில் சோவியத் யூனியனின் இடதுசாரித்துவம் பேசினால், அதில் ஒரு மதிப்பு இருந்ததான எண்ணங்களில் சில நண்பர்களோடு சென்று கம்யூனிஸ் தலைவர் பீட்டர் கெனமன், லங்கா சமசமாஜ கட்சியில் டாக்டர் என்.எம்.பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா போன்றோரின் பேச்சுக்களைக் கேட்பது வழக்கம். அப்படியான பேச்சுக்களில் பீட்டர் கெனமன் சொன்னவை சில நினைவில் ஆணித்தரமாக பதிந்தன. அவை சோசலிசம் பற்றியனவல்ல. சாதாரணமான சமூக ஒழுங்குகள்தான்.

பிணக்குகள், பிரச்சினைகள் என்பவை தனிமனிதருக்கும் குழுமங்களுக்கும், ஏன் நாடுகளிடையேயும் ஏற்படுபவைதான். அவற்றைப் பற்றித் தீர்ப்பதற்கு முயற்சிகளெடுத்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் போது எப்பொழுதும் நாங்கள் தொடக்கத்திலேயே பிணக்குகளுள்ள விடயங்களையே பேசத் தொடங்கி, பிணக்குகளோடே பிரிகிறோம். முதலில் நாங்கள் எங்களிடையே இருக்கும் இணக்கமான விடயங்களைப் பேசவேண்டும். அப்படிப் பேசும் பட்சத்தில் பேசுவோர் இடையே கூட ஒரு சகோதரத்துவம் (franticity) தோன்றும். வளர்ச்சியிலே பின்னர் பிணக்குள்ள விடயங்களை ஒவ்வொன்றாக எடுத்து இணக்கம் காணலாம் என்பர்.

போரின் பின்னால் எல்லோருமே வன்முறையற்ற வழிகளைத்தான் கடைப்பிடிப்பார்கள் என விடுதலைப் புலிகளின் கே.பி. உட்பட அறிவித்தார்கள். நாடுகடந்த தமிழீழ அரசைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் ஒரு நாட்டுக்குள் அமைந்த தீர்வை அடிப்படையாகக் கொள்ளலாம் என அபிப்பிராயம் கொள்கிறார்கள். எல்லோருமே மனித உரிமை மீறல்களையும் மனிதாபிமானத்திற்கெதிரான செயல்பாடுகளையும் இனப்படுகொலையையும்தான் பாலமாகப் பாவிக்கிறார்கள். ஆகவே ஒரு பொதுத் தளத்திற்கு ஏன் இணக்கம் காண முடியாமலிருக்கிறது என்பது மக்களுக்குப் புதிராகவே இருக்கிறது. இவை மக்களுக்காகவா, தங்களுக்காகவா என்று குழம்புகிறார்கள்.

(வளரும்......)



நெல்ஸன் மண்டேலாவுடன் தலாய் லாமா



ஜோர்ஜ் பெர்னாண்டஸுடன் தலாய் லாமா

காலைக்கதிர் Kalaikkathir

# தாய்நாட்டுக்குத் திரும்பிய பின்னர் ஓய்வூதியம் பெற வாய்ப்பளிக்கவும்

## இத்தாலியில் வாழும் இலங்கையர்கள் கோரிக்கை

**தாய்நாட்டுக்குத் திரும்பிய பின்னரும் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுத் தருமாறு இத்தாலியில் வாழும் இலங்கை மக்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தனர்.**

இத்தாலியில் வாழும் இலங்கை மக்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை போலோக்னா நகரில் இடம் பெற்றது.

இத்தாலியின் பல்வேறு நகரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி வருகைதந்திருந்த இலங்கைப் பிரதிநிதிகள் போலோக்னா ஹோட்டலில் பிரதமரை சந்தித்து கலந்துரையாடினர்.

கொவிட்-19 தொற்று நிலைமைக்கு மத்தியில் இவ்வாறு இத்தாலிக்கு விஜயம் செய்து இத்தாலியில் வாழும் இலங்கை மக்களை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியமை குறித்து இலங்கை பிரதிநிதிகள் பிரதமருக்கு நன்றி தெரிவித்தனர்.

அவர், ஜனாதிபதியாக விருந்த காலப்பகுதியில் இத்தாலி மற்றும் இலங்கை இடையே ஏற்படுத்தப்பட்ட இருதரப்பு நட்பு காரணமாக இதுவரை இத்தாலியில் வாழும் இலங்கை மக்களுக்கு கிடைக்கும் வசதிகள் தொடர்பிலும் அங்கு வருகைதந்திருந்த பிரதிநிதிகள் நினைவுகூர்ந்தனர்.

மிலான் நகரில் இலங்கை கொன்சியூலர் அலுவலகம் அமைப்பதற்கு அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட தொலைநோக்கு செயற்பாடு காரணமாக பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதில் இலங்கையர்கள் பலரது காலமும் பணமும் மிச்சப்படுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் மீண்டும் இலங்கைக்கு திரும்பும் எதிர்பார்ப்புடன் காணப்படும் இத்தாலியிலுள்ள இலங்கை மக்களுக்கு இருபது ஆண்டு சேவை காலத்தின் பின்னர் அந்நாட்டில் வழங்கப்படும் ஓய்வூதியத்தை தாய்நாட்டுக்கு திரும்பிய பின்னரும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை பெற்றுத் தருமாறு அங்கு வருகை தந்திருந்த பிரதிநிதிகள் பிரதமரிடம் கேட்டுக்கொண்டனர்.

குறித்த முன்மொழிவு தொடர்பில் இத்தாலி அரசாங்கத்துடன் கலந்துரையாடுமாறு பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே அறிவுறுத்தினார்.



# வெளிவிவகார அமைச்சர் பீரிஸுடன் இத்தாலியின் போலோக்னா பேராயர் சந்திப்பு

*வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இத்தாலி - போலோக்னா பேராயர் கர்தினால் மேட்யோ மரியா ஷுபி ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.*

*வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இத்தாலியில் இடம்பெற்ற ஜி-20 சர்வமத மாநாட்டில் கலந்துக்கொள்ளச் சென்றிருந்த நிலையிலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றது.*



# நோர்வே நாடாளுமன்ற உறுப்பினராக இலங்கை வம்சாவழி தமிழ்ப் பெண் தெரிவு

இலங்கையில் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கம்சாயினி குணரட்ணம் நோர்வேயில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

கம்சாயினி இலங்கையிலிருந்து நோர்வே நாட்டுக்குத் தனது மூன்றுவயதில் குடிபெயர்ந்துள்ளார். 19 வயதில் அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்த கம்சி 27 வயதில் ஒஸ்லோவின் துணை மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், கடந்த 2019 ஆண்டும் அதே பதவிக்கு மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

ஐரோப்பாவில் முதன் முதலாக ஈழத்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 33 வயதான கம்சாயினி, நோர்வேயில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தலில் தொழிற்கட்சி சார்பாக இரண்டாம் நிலையில் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## திஸ்ஸ விதாரண எம்.பி. வலியுறுத்து



தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம். இருப்பினும் இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் ஏதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

புதிய அரசமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும். என்பதை ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் வலியுறுத்தியுள்ளோம்.

ஆரம்பத்தில் செயற்திறனுடன் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் தற்போது மந்தகரமான முறையில் உள்ளன என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் இனங்களுக்கிடையில் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு புதிய அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட வேண்டும். மாகாண சபை பலப்படுத்தப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் 2005 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் அப்போதைய ஜனாதிபதியாக பதவி வகித்த தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் 'சர்வக்கட்சி தலைவர் மாநாடு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரையில் அவ்வறிக்கை செயற்படுத்தப்படவில்லை. அந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை தமிழ் - முஸ்லிம் கட்சிகளும் ஏற்றுக் கொண்டன.

புதிய அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் வலியுறுத்தினோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் ஆரம்பத்தில் வினைத்திறனாகக் காணப்பட்டாலும் தற்போது மந்தரமான முறையில் காணப்படுகின்றன. - என்றார்.

# கொழும்பு - புத்தளம் பிரதான வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல்

கொழும்பு - புத்தளம் பிரதான வீதியில் வென்னப்புவ, மாரவில, மஹவெள, மாதம்பை, சிலாபம் ஆகிய பகுதிகளில் ஏற்படுகின்ற கடும் போக்குவரத்து நெரிசல் காரணமாக, அதற்குத் தீர்வு வழங்கும் வகையில் இரணவில ஊடாக சிலாபம் வரை பீ 640 வீதியின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துமாறு கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

32 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி இரு பாதைகளைக் கொண்டதாகும். இதுவரையில் 18 கிலோ மீற்றர் வீதி நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

இந்தவீதியில்பருதெல்பொலபிரதேசத்தில் 100 மீற்றர் தூரம் கொண்ட பாலத்தின் நிர்மாணப்பணிகள்முழுமையாகநிறைவடைந்துள்ளன. இதேபோன்று தொடுவாவ பிரதேசத்தில் 80 மீற்றர் நீளமுடைய பாலத்தின் நிர்மாணப்பணிகளும் நிறைவடைந்துள்ளன.

போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காண்பதோடு மாத்திரமின்றி, சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் இந்த வீதி நிர்மாணப்பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.



# ஜனநாயகம் மறந்து போகும் நிலையில் விதைக்கப்படுகின்றது இராணுவ ஆட்சி

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் காட்டம்



ஜனநாயகத்தை மறந்து போகும் நிலையிலே இராணுவ ஆட்சியை படிப்படியாக விதைத்து கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் உண்மை என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சர்வதேச ஜனநாயக நாளான கடந்த புதன்கிழமை கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

கடந்த புதன்கிழமை சர்வதேச ஜனநாயக தினமாகக் குறிப் பிடப்படுகின்றது. எங்களுடைய இலங்கையை எடுத் துக்கொண்டால், அதிலும் தமிழ் மக்களை எடுத்துக்கொண் டால், இங்கே ஜனநாயகம் என்பது கேள்விக்குறியே.

ஜனநாயக ரீதியிலான ஆட்சியில், நாங்கள் இல்லை என்பது தான் உண்மை. ஜனநாயக நாடென்று கூறிக்கொண்டு, இராணுவத்தினுடைய ஆட்சி தான், படிப்படியாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

உண்மையிலேயே ஒரு ஜனநாயக நாட்டில், எங்களுடைய மக்கள், சுபீட்சமாக வாழ வேண்டும் என்ற ஒரு நோக்கம் தான், எங்கள் அனைவருக்கும் உள்ளது.

இந்த நிலையில் உதாரணத்துக்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுகின்றேன்.

இந்த வருடம் தை மாதம் 21 ஆம் திகதியளவில் 'இராணுவமயமாக மாறும்' இலங்கை என்ற தலைப்பில் ஜஸ்மின் சூக்காவின் அமைப்பு கருத்து வெளியிட்டிருந்தது. 39 இராணுவ அதிகாரிகள், ஓய்வு நிலை இராணுவ அதிகாரிகள், சிவில் சேவை தொழில் பதவிகளைப் பெற்று வருகின்றனர் என அது சுட்டிக்காட்டியிருந்தது.

குறிப்பாக, ஒரு முக்கியமான பொறுப்பான விடயங்கள் அனைத்தையும், அதாவது கொரோனாவுக்கான நடவடிக்கை, காவல்துறை, புலனாய்வுத்துறை, சிறைகள், வெளிநாட்டுக் கொள்கை, விமான நிலையங்கள், துறைமுகங்கள், சுங்கம், அடிப்படைத் தேவைகள், விவசாயம், மீன்பிடி, நில அபிவிருத்தி உட்பட பல துறைகளிலும் இராணுவத்தினுடைய ஆட்சியை இங்கே காணக்கூடியதாக இருக்கின்றது.

எங்களுடைய முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, மகாவலி எல் வலயம் என்று சொன்னால், தமிழர்களுடைய காணிகளைப் பறித்து சிங்கள மக்களுக்கு வழங்குகின்ற ஒரு நடவடிக்கை அல்லது ஒரு நிறுவனம் அல்லது ஒரு திணைக்களம் என்று எண்ணக்கூடிய அளவிலே, எங்களுடைய மக்கள் இருக்கின்றார்கள். அப்படியாக நடக்கின்றது.

எங்களுடைய பகுதியிலே. அப்படியாக இருக்கையில் ஜனநாயகம் என்பது, இங்கு கேள்விக்குறியாகவும், ஜனநாயக ரீதியாக, ஒரு மலர்கின்ற, அதாவது, சந்தோசமாக இருக்கின்ற நிலையில் நாங்கள் இல்லை.

எங்களுடைய தமிழர்களுடைய நிலங்கள் பறிபோகின்றன, தமிழர்களுடைய நீரேரிகள், ஆறுகள் பறிபோகின்றன. தமிழர்களுடைய குளங்களை ஆக்கிரமிப்பு செய்து முன்னைய அரசர்கள் குளங்களை கட்டிவித்தார்கள் ஆனால் இப்போது இலங்கை அரசாங்கத்தினுடைய படை கட்டுமானப் பணிக்காக அந்தக் குளங்களை ஆக்கிரமிப்பு செய்து குளங்களை மூடி முல்லைத்தீவு மாவட்டத்திலேயே பல குளங்களை மூடி இராணுவ கட்டமைப்போ அல்லது விமானப்படை கட்டமைப்போ, உருவாக்கப்பட்டிருக்கின்ற சம்பவங்கள் உள்ளன.

இப்படியாக கடல் ஆக்கிரமிப்பு, கடலில் எங்களுடைய மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலைமையில், அத்துமீறிய நடவடிக்கைகள் பெரும்பான்மை இன மக்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதை படைத்தரப்பு ஆதரவாக பார்த்துக் கொண்டு, ஆதரவு கொடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இப்படியான நிலைமைதான், எங்களுடைய மக்களுக்கு இங்கே காணப்படுகின்றது.

இந்த வகையிலே தமிழர்களுடைய மத அடையாளங்கள் கூட ஆக்கிரமிக்கப்படுகின்றன. இன்றைய இலங்கையைப் பொறுத்தமட்டிலே, அடக்குமுறை ஆட்சி, அதிகார திணிப்பு, பாரபட்ச அனுமதிகள், அத்துமீறிய நடவடிக்கைகள், பௌத்த மத திணிப்பு இப்படியாக ஆக்கிரமிப்பின் உச்சம் என தமிழினத்தின் மீதும், தமிழர்களுடைய நிலங்களின் மீதும், தமிழர்களுடைய வாழ்வாதாரத்தின் மீதும், பாய்கின்ற கொடுமைகள் ஏராளம்.

இந்த ஜனநாயகம் என்பதையே, எங்களுடைய மக்கள் மறந்து போகும் நிலைமைக்கு இந்த அரசு கொண்டு வந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டுவதோடு, இராணுவ ஆட்சியை படிப்படியாக இந்த ஜனநாயகத்தை மறந்து போகும் நிலையிலே இராணுவ ஆட்சியை படிப்படியாக விதைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் உண்மை என்றும் தெரிவித்துள்ளார்.

# இராஜாங்க அமைச்சுப் பதவியை முழுமையாக லொஹான் ரத்வத்தே துறக்கவில்லையாம்!

லொஹான் ரத்வத்தே இராஜாங்க அமைச்சர் பதவியை முழுமையாக துறக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 12 ஆம் திகதி தமிழ் அரசியல் கைதிகளுக்கு துப்பாக்கி முனையில் கொலை மிரட்டல் விடுத்தார் என லொஹான் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் லொஹான் ரத்வத்தே கடந்த புதன்கிழமை சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு அமைச்சுப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இது தொடர்பிலான கடிதம் ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அவர் அனுப்பி வைத்திருந்தார்.

லொஹான் ரத்வத்தே சிறைச்சாலைகள் விவகார மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் இராஜாங்க அமைச்சராக கடமையாற்றி வந்தார். அனுராதபுரம் சிறைச்சாலை சம்பவத்தைத் தொடர்ந்து லொஹான் ரத்வத்தே ஓர் இராஜாங்க அமைச்சர் பதவியை மட்டும் இராஜினாமா செய்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தனது இராஜினாமாக் கடிதத்தில் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு அமைச்சுப் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன் எனத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலை சம்பவத்தில் அரசாங்கத்தை அசௌகரியப்படுத்த விரும்பவில்லை என அவர் மேலும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, லொஹான் ரத்வத்தே தொடர்ந்தும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகக் கடமையாற்றுவார் எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெற்று வருகின்றமையுடன், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டமும் நடைபெறவுள்ளது. இவ்வாறான ஒரு பின்னணியில் லொஹான் ரத்வத்தே ஓர் இராஜாங்க அமைச்சர் பதவியை துறந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

# பம்பலப்பிட்டியில் இருவர் மீது தாக்குதல்; அம்பாந்தோட்டை நகரபிதா கைதாகலாம்!

பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட, கொத்தலாவல அவனியூ பிரதேசத்தில் அமைந்துள்ள இடமொன்றுக்குள் அத்து மீறி நுழைந்து அங்கிருந்த இரு பாதுகாவலர்களை தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், அம்பாந்தோட்டை நகர பிதா எராஜ் பெர்னாண்டோவை கைது செய்ய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் கூறினர்.

அம்பாந்தோட்டை நகர பிதாவின் தாக்குதலுக்கு உள்ளான இரு பாதுகாவலர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பம்பலப்பிட்டி பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வேளையில், தனது காரில், குறித்த பகுதிக்கு எராஜ் பெர்னாண்டோ தனியாகச் சென்றுள்ளார் எனக் கூறப்படும் நிலையில், எந்தக் காரணத்தையும் கூறாது தன்னையும், தன்னுடன் இருந்த மற்றைய பாதுகாப்பு உத்தியோகத்தரையும் தாக்கினார் எனவும், தனியார் பாதுகாப்பு நிறுவன ஊழியர் ஒருவர் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முற்பகல் செய்துள்ள முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

புதன் பிற்பகலாகும் போது இந்தச் சம்பவம் தொடர்பில் நால்வரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனக் கூறிய பம்பலப்பிட்டி பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்வதற்கு மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகக் கூறினர்.

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் அனில் ஜயந்தவின் கீழ் சிறப்புக் குழு இது தொடர்பி லான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

# இலங்கையில் ஜனநாயகம் ஒரு கேலிக் கூத்தாகின்றது!

## சிவசக்தி ஆனந்தன் கிண்டல்



'ஜனநாயகம் என்பது இலங்கையை பொறுத்தமட்டிலே ஒரு கேலிக்கூத்தாகவும், அது ஒரு சர்வாதிகாரத்தை நோக்கியும் ஜனநாயகத்தின் பெயரால் நம்பி ஆதரவு வழங்குகின்ற மக்கள் ஏமாற்றப்படுகின்ற ஒரு துரதிஷ்டவசம் தான் இலங்கையை பொறுத்தமட்டிலே இருக்கிறது' என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் 15ஆம் திகதியை ஐ.நா. சர்வதேச ஜனநாயக நாளாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஜனநாயகம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் -

'ஜனநாயகத்துக்குப் பல விதமான விளக்கங்களும், வியாக்கியானங்களும், பல தலைவர்களால் சொல்லப்பட்டாலும் கூட, இலங்கையைப் பொறுத்தமட்டில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என்று பெயரளவில் மட்டுமே இங்கு ஜனநாயகம் இருக்கிறது.

நீண்ட காலமாகத் தமிழ் மக்களினுடைய உரிமை தொடர்பாக அல்லது சிறுபான்மை மக்களினுடைய ஜனநாயகத்தை மதித்து நடக்கின்ற நிலைமைகள், ஜனநாயகம் என்ற பெயரால் சர்வாதிகாரமும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்பாடுகளும் தான் இலங்கையைப் பொறுத்தமட்டில் நீண்ட காலமாக இருக்கிறது.

ஆகவே பெரும்பான்மை மக்களினுடைய முடிவுகள் ஜனநாயக ரீதியாக ஏற்றுக் கொண்டாலும் கூட, அது முழுக்க முழுக்க ஜனநாயகத்தினுடைய பெயரால் அது ஒரு சர்வாதிகாரத்தை நோக்கித்தான் இருக்கிறது.


இதே மாதிரி தமிழர்கள் மத்தியில் தமிழர்களுடைய உரிமைக்காகப் புறப்பட்டு இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலும் கூட ஜனநாயகத்தின் பெயரால் கட்சிகளுக்குள்ளும் ஜனநாயகம் இல்லை. மக்கள் வழங்குகின்ற ஜனநாயக உரிமைகளுக்கும், அதை மதித்துக் கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படுவதில்லை.

ஆகவே ஜனநாயகத்தின் பெயரால் தமிழ் அரசியலுக்குள்ளேயும் சரி அல்லது இலங்கையில் இருக்கக்கூடிய, சிங்களப் பேரினவாத அரசியலுக்குள்ளேயும் சரி முழுவதும் ஜனநாயகத்தின் பெயரால் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். மக்களுக்கு மேல் சர்வாதிகாரம் செலுத்தப்படுகின்ற ஒரு நிலைமைதான் இருக்கிறது.

ஆகவே ஜனநாயகம் என்பது இலங்கையைப் பொறுத்தமட்டிலே ஒரு கேலிக்கூத்தாகவும், அது ஒரு சர்வாதிகாரத்தை நோக்கியும் ஜனநாயகத்தின் பெயரால் நம்பி ஆதரவு வழங்குகின்ற மக்கள் ஏமாற்றப்படுகின்ற ஒரு துரதிருஷ்டவசம்தான் இலங்கையை பொறுத்தமட்டிலே இருக்கிறது' எனத் தெரிவித்துள்ளார்.

# 25 கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

- வே.வரதசுந்தரம் -



**ஒருகூரை நிழற்கீழ் ஒன்றுகூடி வாழ்ந்தநாம்**
**இன்று கூறுகூறானோம் ஆச்சிநீ காளி!**
**ஒருபானை சோற்றை உண்டு மகிழ்ந்தநாம்**
**இன்று கூறுநூறானோம் ஆச்சிநீ காளி!**
**உணர்வுகள் மரத்தாலும் உதிரம் தடிப்பென்று**
**உணருவர் ஒருநாள் ஆச்சிநீ காளி!**
**உறவுகள் பிரியினும் துன்பம் வருங்கால்**
**துணையாய் நிற்போம் ஆச்சிநீ காளி!**

அற்புதம் வாய்ந்த திருகோணமலை பத்திர காளி அம்பாள் ஆலய வீதியினைக் கைகூப்பிய வாறு மூன்றுமுறை பயபக்தியுடன் வலம்வந்து வழிபாடாற்றிய அம்பாள் பக்தர்கள், தமிழ்கூறும் நல்லுலகில் புகழ்பூத்த மூத்த எழுத்தாளர் திரு கோணமலை மண்ணின் மைந்தன், வித்தியா தரன் அவர்கள் அம்பாள்பற்றி ஆழ்புலமையுடன், இனிய தமிழில் செலச்சொல்வது கேட்டு வியந்து நிற்கின்றனர்.

அவர் பெற்றோர் நடேசபிள்ளை – பத்மாவதி தம்பதியர் அம்பாளிடத்து அசைக்க முடியாத நம் பிக்கைமிக்க காளியாச்சி பக்தர்கள். காளி கோயில் வருடாந்த திருவிழாக்காலத்தில் பத்து நாள்களும் குடும்பத்துடன் தவறாது பங்குபற்று வர். வித்தியாதரன் அவர்களும் தனது மூத்த, இளைய சகோதரர்களுடன் இணைந்து நேர்த் திக் கடனாக அங்கப்பிரதட்சணம் செய்வார். இந்தப் பின்னணியில் அவரிடம் அம்பாள் பக்தி இயல் பாகவே இருத்தலைக் காண்கிறோம். காளி ஆச்சி பக்தி அவர் குருதியில் பாய்கிறது என்பேன். பத்தி ரிகைத்துறை வாழ்வில் வித்தியாதரன் பல அச் சுறுத்தல்களை முகங்கொடுத்த வேளைகளில் கோணமலைக் காளி ஆச்சி அவரைக் காப்பாற் றிய அற்புதங்கள் யானறிவேன்.

அரசியல் கட்டுரைகள் எழுதி வாசகர்கள் நன் மதிப்பைப் பெற்ற வித்தியாதரன் அவரது பத்தி ரிகைத்துறை ஆசான் சிவநாயகம் ஐயாவின் அடியொற்றி, ஆன்மீகத் துறையிலும் கால்ப தித்து எழுத்துப்பணி, சமயப்பணி ஆற்றவேண் டும் என்று வாசகர்குழாம் வேண்டுகோள் விடுக் கிறது. வித்தியாதரன் காளி ஆச்சி புகழ்கூறக் கேட்போம்:

‘தெய்வ வழிபாட்டிலே தேவிவழிபாடு மிகப் பழமையானது. ஷிக்வேத காலத்துக்கு முன்னர் பழைய உலகத்தின் முக்கிய தேவதையாக தேவி வழிபாடு இருந்தது. மொகஞ்சதாரோ நாகரிகம் பற்றிய தொல்பொருள் ஆய்வுரையிலே கிடைத்த சரித்திரச் சின்னங்கள் இதற்குச் சான்று பகர் கின்றன.

அந்தநாகரிகத்திலேபிரபலமாக இருந்த அம்பாள் தேவி வழிபாடு, பாரசீகத்தில் இருந்து கிரீஸ் வரை கூட அப்போது பரவியிருந்ததென்றும் சரித்திர ஆய்வாளர்கள் பகர்கின்றனர். அம்பாள்தேவியின் வாகனமும் சிங்கம்தான். அவளும் தீமைகளை சங்காரம் செய்து நீதிக்கு வெற்றியைத் தருகின்ற வீர நாயகியே.

தமிழர்களுடைய வாழ்விலே அவள் காவல் தெய்வமாகவும், காக்கும் அன்னையாகவும் போற் றப்படுகிறாள். வீரத்தின் ஊற்றுக் கண்ணாக நம் மக்கள் அவளையே போற்றுவர்.

தமிழகத்தின் தெற்கு எல்லையைக் காக்கும் குமரியம்மனாகவும், பாரதத்தின் வடக்கிலே இம யத்தின் தலைவியாக ‘இமயக் கிழவி’ என்றும் அவளை இறைஞ்சுவர். போர்வீரர்களும், மறக்குடி மக்களும் வெற்றிவேண்டி காளியை வழிபட்ட தாக, வழிபடுவதாக வரலாறுகள் கூறுகின்றன.

மகிஷாசரமர்த்தினியாகிய காளியை கொற்ற வையாக சிலப்பதிகாரம் கூறுகிறது. சேரன்செங் குட்டுவன் காலத்தில் தொடங்கிய பத்தினித் தெய்வ வழிபாடுகூட காலக்கிரமத்தில் காளியம்மன் வழி



காளி ஆச்சி பக்தர் வித்தியாதரன்

பாட்டுடன் இரண்டறக் கலந்ததாக நமது பெரியார் கள் கூறுகின்றனர். நமது வேதங்களும், ஆகமங் களும், தந்திரங்களும், மகாபாரதம் போன்ற இதி காசங்களும், புராணங்களும் கூட காளிவழி பாட்டைச் சிறப்பித்துக் கூறத் தவறவில்லை.

விடுதலைக் கவிஞன் பாரதி தன்நாட்டு விடு தலைக்காக வீரம்வேண்டி ‘தேசமுத்துமாரியை’ ஏத்தித் தொழுதான். சுப்பிரமணியசிவாவும், வீர மரபு படைத்த ஜான்ஸிராணியும்கூட இறுதிவரை வணங்கியது மகாகாளியையே. ஏன் இந்திய விடுதலை வரலாற்றில் புகழ்பூத்த வீரன், மான நெஞ்சன், வீரபாண்டிய கட்டபொம்மன்கூட தூக் குக்கயிற்றை முத்தமிட்டபோது குலதெய்வமான சக்கம்மா என்கின்ற காளியைத்தான் வணங் கினான். அவனது வீரவாழ்வை உணர்வும், உயிரு மாக நின்று வழிநடத்தியவள் அவளே. ஆத்மீகப் புரட்சிக்கு வித்திட்ட இராமகிருஷ்ணரும், அவர் தம் வழியில் சுவாமி விவேகானந்தரும்கூட ஆத் மார்த்த ரீதியாக தரிசித்தது அன்னை காளி யையே.

இவ்வாறு அன்னையாக விளங்கும் காளி யம்மா நாம் அவள்மீது வைக்கும் பிரேமை கண்டு மனம் புளகாங்கிதம் அடைந்து எம் மீது அன்பு வைத்து அருள்புரிவாள்.


ஈழத்திலே அன்னை காளியின் அருள்பொழி யும் அற்புதத் திருத்தலமாக விளங்குவது திரு கோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம் என்பது அன்னை அடியார்களின் மனம்நிறந்த கணிப்பீடு.

அந்தத் தலத்திலே, அன்னையின் வழிபாட்டில் தன்னையும், தன்குடும்பத்தையும், தன்னைச் சார்ந்தவர்களையும், தனது சமூகத்தையும் தெய்வ வழிபாட்டோடு, அமைதி, இன்முகம், சாந்தம் ஆகி யவற்றோடு அரவணைத்து வழிகாட்டும் புனித பணியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முதல் எட்டு தசாப்தங்களையும் பயனுள்ளதாக செலவிட்டவர் சிவகாமியம்மா. அவர் வழிகாட்டலில் நாமும், நமது சுற்றத்தாரும் அம்பாள் வழிபாட்டில் ஈடுபட திருவருட் சித்தம் கிட்டியது.

நாம்சிறக்க, நம்சமூகம் சிறக்க, நம்இனம் சிறக்க, நம்நாடு சிறக்க காளி அன்னையின் அருள் நமக்குக் கிட்டுவதாக!’ – என்கிறார் வித்தி யாதரன்.

வெ.பொ.சி. என்று போற்றப்படும் கழகப் புலவர் சிவசேகரனார் காளி ஆச்சிமீது பாடிய பொருள் பொதிந்த பாடல்களை படித்தின்புறுவோம்:–

**‘கேதார கௌரியெனப் பேரும்நீ பெற்றாயே!**
**ஆராதனை செய்தே அர்ச்சித்தார் பூவாலே!**
**செந்நூலிற் காப்பணிந்து சேவடியைத் தோத்தரித்தார்!**
**இருபத்தொரு நாள்விரதம் அனுட்டித்து**
**கரகத்தில் வைத்துன்னை காதலித்துப் பூசித்தார்!**
**உத்தரமா காளி உடுக்கடித்து வாருமம்மா!**
**தீமையெல்லாம் ஓடத் திரிசூலி வாருமம்மா!**
**காமனைச் சுட்டெரித்த கண்ணாட்டி வாருமம்மா!**
**காலன்தனை உதைத்த காளிகையே வாருமம்மா!’**



கழகப் புலவர் சிவசேகரனார்

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தமுறை ஜெனிவா தொடரிலாவது எமது பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்!

## காணாமற் போனோர் உறவுகள் உருக்கம்

**(கலையமுதன்)**

யாழ்ப்பாணம்,செப்.17

காணாமல்போன உறவுகளைத் தேடி அலைந்த பெற்றோர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து விட்டார்கள். நாங்களும் எங்கள் உயிரை எப்போது மாய்ப்பது என தெரியாமல் வாழ்ந்து வருகின்றோமென வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் யாழ் மாவட்ட இணைப்பாளர் சிவபாதம் இளங்கோதை தெரிவித்தார்.

நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் கடந்த புதன் கிழமை நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தமுறைநடைபெறும்ஜெனிவாக்கூட்டத்தொடரின் மூலமாக எமது காணாமல்போன உறவுகளின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணப்படவேண்டும். நேரடியாக ஜெனிவா சென்று சாட்சியமளிக்க விட்டாலும் கூட இந்த கொரோனாக் காலத்தில் ஊடகங்கள் மூலமாக எங்களுடைய கருத்தை கொண்டு சேர்க்க விரும்புகின்றோம்.

1,500 நாள்களுக்கு மேலாக அச்சுறுத்தல்களையும் தாண்டி எமது உறவுகளை தேடி போராடி வருகிறோம். ஜெனிவாவுக்கு சென்று எமது உறவுகளுக்காக நாங்கள் பலமுறை குரல் கொடுத்திருக்கிறோம் எமது கண்ணீருக்கு என்ன பதில்?

கால அவகாசமோ, கால நீடிப்போ, காணாமல் போனோர் அலுவலகமோ எமக்கு வேண்டாம். ஸ்ரீலங்கா அரசு மீது எங்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. இந்த நிலையிலேயே ஐக்கிய நாடுகள் சபையை நாடுகின்றோம்.

காணாமல்போன உறவுகளைத் தேடி அலைந்த பெற்றோர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து விட்டார்கள். நாங்களும் எங்கள் உயிரை எப்போது மாய்ப்பது எனத் தெரியாமல் வாழ்ந்து வருகின்றோம்.




நாங்கள் 12 வருடங்களாகப் போராடி வருவது பணத்துக்காக அல்ல எங்களுடைய பிள்ளைகளின் உயிர்ப் பிச்சைக்காகவே. காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த பெரிய சிரமப்படுகின்றனர். இந்த நிலையில் அவர்களின் பிள்ளைகளை தயவுசெய்து மீட்டுத் தாருங்கள் . – என்றார்.

# தமிழ் மக்களுக்கு எதிரான எந்த ஆவணத்திலும் ஒப்பமிடவில்லை!

## மட்டு மாநகர முதல்வர் சரவணபவன் தெரிவிப்பு




தமிழ் மக்களுக்கு எதிரான எந்த விதமான ஆவணத்திலும் நான் கையெழுத்திடவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்புதமிழ்மக்களின் உரிமையைப்பெறுவதற்கானசெயற்பாடுகளுக்கு தடையாக இருக்காது என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடந்த ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் கூட தமிழ் மக்களுக்கு எதிரான எந்த ஓர் ஆவணத்திலும் கையெழுத்து வைக்கத் தயாரில்லை.

இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தன்மைக்கு மேலும் இறுக்கமான ஒரு செயற்பாடாகத் தான் ஐ.நா.ஆணையாளரின் கருத்தை நான் பார்க்கின்றேன். இன்னும் முழுமை அடையவில்லை.

இலங்கை அரசாங்கம் மிகவும் சிக்கலான ஒரு நிலைப்பாட்டுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக விளங்குகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அனுப்பப்பட்ட ஆவணங்களும் ஐ.நாவில் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபையில் சில பிழையான விடயங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான எத்தனிப்புகள் நடைபெறுகின்றன என அறியமுடிகின்றது.

பொதுமக்களாகிய நீங்கள் இந்த விடயங்களில் மிகத்தெளிவாக இருக்க வேண்டும். மட்டக்களப்பு மாநகர சபையில் எந்தவிதமான சட்டவிரோதமான செயற்பாடுகளுக்கும் ஊழல் செயற்பாடுகளுக்கும் இடம் இல்லை. அவ்வாறு பிழையான வழிகளை நீங்கள் பின்பற்றும் பட்சத்தில் எமக்கு அது தெரியவரும் போது இரண்டு நபர்களுக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்து கொள்ள விரும்புகின்றேன்.

மட்டக்களப்பு மாநகர சபை இலங்கையிலும் சரி கிழக்காசியாவிலும் சரி முதலாவது சிறுவர் சிநேக நகர அபிவிருத்தி ஏற்பாட்டை மட்டக்களப்பு மாநகர சபை தான் ஆரம்பித்தது இன்று அதனுடைய முதலாவது ஆண்டு பூர்த்தி அடைந்துள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸார் மீது தாக்குதல் கொழும்பில் நடந்தது

கொழும்பு தெமட்டகொடையில் கடந்த புதன்கிழமை மாலை, போதைப்பொருள் மறைவிடம் ஒன்றில் நடத்தப்பட்ட சோதனையின் போது, இரண்டு பொலிஸார் காயமடைந்தனர்.

இரகசிய தகவல் ஒன்றை அடுத்து, போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரை கைது செய்வதற்கான நடவடிக்கையில், துணை பொலிஸ் அதிகாரியின் தலைமையில் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது, அதிகாரிகள் 10 கிராம் ஹெரோயினுடன் ஒருவரை கைது செய்தனர். இந்நிலையில், கைது செய்யப்பட்டவரின் ஆதரவாளர்கள் குழு பொலிஸாரை தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் நான்கு பேரை பொலிஸார் கைது செய்தனர். சம்பவத்தில் காயமடைந்த இரண்டு பொலிஸாரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் திருடிய பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

*கற்பிட்டி நுரைச்சோலை லக்விஜய அனல் மின்நிலையத்தில் பெயின்ட் உள்ளிட்ட சில பொருள்களை திருடிச் சென்ற குற்றச்சாட்டில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.*

*இலங்கை மின்சார சபையின் கீழ் கற்பிட்டி நுரைச்சோலையில் இயங்கும் லக்விஜய அனல் மின்நிலையத்தின் பாதுகாப்பு பிரிவில் தொடர்ச்சியாக கடமையாற்றி வந்த கினிகத்தேன பகுதியைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பாதுகாப்பு அதிகாரி பயணித்த வாகனம் கரம்பையிலுள்ள பொலிஸ் மற்றும் கடற்படையினர் இணைந்துநடத்தும் சோதனைச் சாவடியில்நிறுத்தி சோதனைக்குஉட்படுத்துப்பட்ட போது, அந்த வாகனத்தில் லக்விஜய அனல் மின்நிலையத்துக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் பெயின்ட் மற்றும் வாகனப்பட்டிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என நுரைச்சோலை பொலிஸார் கூறினர்.*

*பாதுகாப்பு உத்தியோகத்தரால் திருடிச் செல்லப்பட்டதாக் கூறப்படும் பெயின்ட் உள்ளிட்ட பொருள்களின் பெறுமதி சுமார் 30 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமானவை என பொலிஸார் குறிப்பிட்டனர்.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்*

# முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் குறித்து பேச்சு

*முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் குறித்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவுடன், நீதி அமைச்சர் அலி சப்றி பேச்சு நடத்தியுள்ளார்.*

*இதன்போது முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பில், அமைச்சரவையின் அண்மைய முடிவுகள் தொடர்பான விடயங்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.*

*இதேவேளை, அமைச்சர் எடுக்கும் முடிவுகள், நாட்டுக்கு நன்மை பயக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம் என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா பிரதிநிதிகள் சந்திப்பின் போது தெரிவித்துள்ளனர்.*

## கொவிட் தொற்றால் தாய் மரணம்;

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி யாழ்.சென்ற மகனுக்கு வழக்கு!

வவுனியாவில் கொவிட் தொற்றுக்குள்ளான தாய் ஒருவர் மரணமடைந்துள்ள நிலையில், குறித்த தாயுடன் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரது மகன் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி வீட்டில் இருந்து வெளியேறி யாழ்ப்பாணம் சென்றுள்ள நிலையில் அவருக்கு எதிராக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, கோவில்குளம், 5 ஆம் ஒழுங்கையில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தாய் (வயது 73) மற்றும் மகன் (வயது 20) ஆகியோர் அவர்களது வீட்டிலேயே தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் தாய்க்கு நோய் தாக்கம் அதிகரித்தமையால் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போது சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை மரணமடைந்தார்.

தாய் மரணமடைந்த தகவலை தெரியப்படுத்தி, குடும்பத்தினரை தகனக் கிரியைக்கு அழைப்பதற்காக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அவர்களது தனிமைப்படுத்தப்பட்டிருந்த வீட்டுக்குச் சென்ற போது தொற்றுக்குள்ளான நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மகன் வீட்டில் இருக்கவில்லை. இது தொடர்பில் வீட்டில் இருந்த அவர்களது உறவினர்களிடம் விசாரித்த போது அவர் யாழ்ப்பாணம் சென்றுள்ளார் எனத் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட இளைஞனுக்கு எதிராக வவுனியா பொலிஸார் ஊடாக வழக்குத் தாக்கல் செய் துள்ளனர். (100)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

## சர்வதேச போர்க்குற்ற விசாரணையில்

# புலிகளுக்கு எதிராக எம்மைத் தூண்டிவிட சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் முயற்சி!

## யாழில் சித்தார்த்தன் பகிரங்கக் குற்றச்சாட்டு

(இ.கலையமுதன்)



**சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சாட்சியமளிக்க எங்களைத் தூண்டிவிட சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் முயற்சிக்கிறார்களோ என்ற சந்தேகமும் எனக்குண்டு.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. தெரிவித்தார்.**

எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. போன்றவர்கள் அண்மைக்காலமாக வெளியிட்டு வந்த கருத்துக்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களை வழங்கியபோதே, இந்த யதார்த்தங்களை அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு தமிழ்த் தரப்புக்கள் 3 கடிதங்கள் அனுப்பியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் 5 கட்சிகள் கையெழுத்திட்டு ஒரு கடிதம் அனுப்பினோம். இரா. சம்பந்தன் ஒரு கடிதம் அனுப்பினார். இன்னொரு கடிதமும் அனுப்பப்பட்டது.

நாம் அனுப்பிய கடிதத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்குமிடையில் சம்பந்தமில்லை. இரா.சம்பந்தன் அதைக் கூறியுள்ளார். மற்றைய கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதனும், நானும் அதையே கூறியிருந்தோம்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் ஆவேசத்திற்குத்தான் என்ன காரணமென்பது தெரியவில்லை.

அவர் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் சந்திப்பை நடத்தி ஆவேசமாகப் பேசியிருந்தார். இரா.சம்பந்தன் கடிதம் எழுதுவதைத் தெரிந்துகொண்டு, அதை மீறி நாம் கையெழுத்திட்டதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், உண்மையில் அப்படி நடக்கவில்லை. நாங்கள் கையெழுத்திட வேண்டிய ஒரு கடிதமெனில், அதை எழுதத் தொடங்கும்போதே இரா.சம்பந்தன் எமக்குத் தகவல் தந்து விடுவார். ஆனால், இந்தக் கடித விவகாரத்தில் கடைசி வரை எனக்கு ஒரு தகவலும் தரப்படவில்லை.

எம்மைத் துரோகிகள், காட்டிக் கொடுத்தவர்கள் என்றும் சுமந்திரன் கூறியிருந்தார். தமிழரசுக் கட்சியினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் தேர்தல் காலத்தில் மேடை போட்டு இவற்றைத்தான் கதைத்துக் கொண்டிருப்பார்கள். எனக்கு மக்கள் மத்தியிலிருந்த மதிப்பையும், செல்வாக்கையும் குழப்ப அதை செய்தார்கள் என்பது நன்றாகத் தெரியும். அது பலனளிக்காது என்பதை தெரிந்ததால் நான் அதைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டேன்.

ஆனால், இப்போதும் சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் மீண்டும் புலிகளின் போர்க்குற்றம் பற்றியும், புளொட் அமைப்பும் விசாரிக்கப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள்.

சுமந்திரன் தயாரித்த கடிதத்தில், தருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட புலிகளும் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட பகுதி இணைக்கப்பட்டுள்ளது. அது அவர்களின் நிலைப்பாடு. அது வேறு விடயம். ஆனால், நாங்கள் தமிழ்த் தரப்பாக இருந்து கொண்டு, நாங்களே எங்களை விசாரிக்கக் கோருவது எவ்வளவு புத்திசாலித்தனம் எனத் தெரியவில்லை.

அடுத்தது, நாங்களே விசாரிக்கக் கோருவது, நாங்கள் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டோம் என நாங்களே ஒத்துக்கொள்வதைப் போல் அமையும்.

எல்லா இயக்கங்களிற்கிடையிலும் ஒருவருக்கொருவர் பல பிரச்சினைகள் இருந்தன. மோதல்களும் நடந்தன. அது உண்மை. அதற்காக எந்தச் சந்தர்ப்பத்திலும், புலிகளை விசாரியுங்கள் எனக் கூறத்யாராக இல்லை. எங்களை விசாரிப்பதென ஒரு நிலை வந்தால், அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஒரு சர்வதேச விசாரணை நடத்த நாம் தயாராக இருக்கின்றோம். அப்படியொன்று நடந்தால்தான், நாம் எந்தவிதக் குற்றங்களும் செய்யவில்லையென்பதை நிரூபிக்க முடியும்.

நாம் சர்வதேச விசாரணையைக் கோரமாட்டோம் என சுமந்திரன் கூறியிருந்தார். அவருக்குத் தெரியாது, நாம் ஏற்கனவே பலமுறை அதை கோரி விட்டோம்.

1994களின் பின் பேசும்போது, பலமுறை கூறியிருக்கிறேன் - விடுதலைப் புலிகளுடன் எமக்குப் பிரச்சினைகள் இருந்தாலும், பேச்சு என்று வந்தால், அரசு, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டுமெனக் கூறியிருந்தேன். ஏனெனில், அவர்கள் இல்லாத தீர்வு முழுமையடையாது. எங்களுடன் பேசாவிட்டாலும், புலிகளுடன் பேசி ஒரு தீர்வை நடைமுறைப்படுத்தினால் எமக்கும் அதில் பிரச்சினையிராது என கூறியிருந்தேன். ஏனெனில், புலிகள் மிகப்பெரியளவிலான அதிகார பரவலாக்கலையே கோருவார்கள்.

சுமந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூறியிருக்கிறார்கள், கே.பி, கருணா, பிள்ளையான் போல் புளொட்டையும் விசாரிக்க வேண்டும் என்று.

கே.பி, கருணா, பிள்ளையான் ஆகியோர் விடுதலைப் புலிகளை விட்டு வெளியேறிய பின்னர் நடந்தவற்றுக்கு இவர்கள் விசாரணை கோரவில்லை. அவர்கள் புலிகள் அமைப்பில் இருந்தபோது செயற்பட்டமைக்கே இப்போது இருவரும் விசாரணை கோருகிறார்கள்.

கே.பி. யுத்தம் முடிந்த பின்னர் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டவர். அவர் அதன் பின்னர் இலங்கையில் கிட்டத்தட்ட வீட்டுக்காவலில் இருக்கின்றார். அவருக்கு பாதுகாப்பாக 10 - 15 இராணுவச்சிப்பாய்கள் உள்ளனர். அவரை விசாரிப்பதெனில் முழுக்க முழுக்க அவர் விடுதலைப் புலிகள் காலத்தில் செயற்பட்டமைக்காகவே விசாரிக்க வேண்டும்.

இதில் இன்னொரு விடயமுள்ளது. அவரை விசாரிப்பதெனில், அவருடன் செயற்பட்ட ஏராளம் புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். இந்த விசாரணை வலைப்பின்னல் பெரிதாகிக் கொண்டே போகும். இது அரசின் நிகழ்ச்சி நிரல். அரசின் நிலைப்பாட்டை ஒத்ததாகவே இவர்களின் கோரிக்கை உள்ளது.

சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் கூறியதற்குப் பின்னர், இப்போழுது வாசுதேவவும், புலிகள் மீது விசாரணை நடத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்.

போர் முடிந்த பின்னர் இரா.சம்பந்தன் இரண்டு விடயங்கள் சொல்லியிருக்கிறார். முதலாவது, மஹிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்றத்தில் வைத்து பாராட்டினார். பயங்கரவாதத்தை நீங்கள் கட்டுப்படுத்தி மக்களை விடுவித்திருக்கிறீர்கள் நன்றி என்று சம்பந்தன் அப்போது கூற சிங்கள எம்.பிக்கள் மேசையில் தட்டி வாழ்த்து தெரிவித்தனர். இதை சம்பந்தன் மேல் குற்றம் சொல்வதற்காக சொல்லவில்லை. இவையெல்லாம் 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் நடந்த விடயங்கள். சுமந்திரன் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் நடந்தவை. அவருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

அவர் 2010 இற்கு முன்னர் நடந்தவற்றை சுமந்திரன் பேசுவது பிரச்சினையில்லை. அவற்றைப் படித்து, அறிந்துவிட்டு பேசுவதே நல்லது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் சாட்சியமளிக்க எம்மைத் தூண்டிவிடுவதற்கே இந்த குற்றச்சாட்டுக்களை இவர்கள் தெரிவிக்கின்றார்கள். நாம் இதற்கு சரியாக பதில் சொல்ல முயன்றால், அந்தப் பதில்கள் எமக்கு எதிராக மட்டுமல்ல, புலிகளுக்கு எதிராகவும் அவை பயன்படுத்தப்படும். ஆகவேதான் எங்களைத் தூண்டிவிட சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் முயற்சிக்கிறார்களோ என்ற சந்தேகமும் எனக்குண்டு - என்றார்.

# பத்தனை ஆற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

## பலகோணங்களில் விசாரணை



திம்புள்ளை - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை ஆற்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை, வூட்டன் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஏ.தங்கவேல் என்பவரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 9ஆம் திகதி முதல் காணாமல்போய் விட்டார் என்று பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரின் மரணம் தொடர்பாகப் பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நுவரெலியா நீதிமன்ற நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

# கிளைமோர் உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 17

யாழ்., தென்மராட்சி, வரணி, குடமியன் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து, அதிசக்தி வாய்ந்த வெடிபொருள்கள் மீட்கப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, கிளைமோர், கப்டன் பவான் (ஐயா) - 99 எனும் வாகனத் தகர்ப்பு வெடிகுண்டு என்பன மீட்கப்பட்டுள் ளன.

மீட்கப்பட்ட வெடி பொருள்கள் அதிசக்தி வாய்ந்தவை எனப் பொலிஸார் தெரிவித்தனர்



## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 98 ஆயிரத்து 694 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,336 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

## வடக்கில் 15 நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதல் 15 நாள்களில் 225 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை வடக்கு மாகாணத்தில் 33 ஆயிரத்து 737 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 634 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகப்படியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 618 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 356 பேர் உயிரிழந்துள்ளனர்.

## அ'புரத்தில் லொஹான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் அரசியல் கைதிகள் குழு என்னுடன் ஒரு சந்திப்பைக் கோரியதை அடுத்து அவர்களை நேரில் சந்தித்தேன். அதன்படி, கைதிகளின் கவலைகள் குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் அவர்களின் மறுவாழ்வு மற்றும் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட அவர்களின் பிரச்சினைகளை நான் கவனிப்பேன் என அவர்களுக்கு உறுதியளித்தேன் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் வடக்கு, கிழக்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான அரசின் இணைப்பாளர் கீத்நாத் காசிலிங்கமும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பு சிறைத்துறை பொறுப்பதிகாரியின் அலுவலகத்தில் நடந்தது. சந்திப்புக்கு 10 கைதிகள் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் நிலத்தில் அமர முற்பட்டபோது தனக்கு சமதையாக அவர்களுக்கும் கதிரை வழங்குமாறு அமைச்சர் ராஜபக்ஷ தெரிவித்தார். அதையடுத்து அவர்களுக்கு கதிரைகள் வழங்கப்பட்டு சந்திப்பு இடம்பெற்றது.

## வடக்கு, கிழக்கு சிறைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்று சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தலைவர்), செல்வராஜா கஜேந்திரன் (பொதுச்செயலாளர்) , சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்ட குழுவினர் தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர். இதன்போதே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்திற்கு பின் இன்று (நேற்று) காலையில் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளை சந்திக்க முயன்றோம். ஆரம்பத்தில் எமக்கு அனுமதி கிடைக்கவில்லை. சிறை இராஜாங்க அமைச்சின் அனுமதி இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்க முடியாது எனக் கூறியிருந்தார்கள்.

அதன் பின் நாங்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளருக்குத் தொடர்பு எடுத்து பேசினோம். ஆனால், அது தோல்வியடைந்தது. சில மணித்தியாலங்களின் பின் இராஜாங்க அமைச்சின் செயலாளர் தொடர்பை ஏற்படுத்தி அனுமதி வழங்க முடியும்; நீங்கள் விரும்பினால் பார்க்க முடியும் எனத் தெரிவித்தார்.

அதன்பின் மதியம் 12.30 இற்கு மீண்டும் சிறைச்சாலைக்குச் சென்று அரசியல் கைதிகளைச் சந்திக்க கூடியதாக இருந்தது. இதன்போது உள்ளே சென்று தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. 10 அரசியல் கைதிகள் அநுராதபுரம் சிறையில் இருக்கும் நிலையில் இரண்டு கைதிகளை மட்டுமே சந்திக்கக் கூடியதாக இருந்தது.

நாங்கள் அவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றபோது அதனைக் கவனிக்க வேண்டும். இந்த விடயம் கணிசமான அளவுக்கு சர்வதேச மட்டத்தில் எடுபட்டுள்ளது. சிறைச்சாலை நிர்வாகத்தில் நாம் தீர்வை எதிர்பார்க்க முடியாது. அவர்களது சூழல், ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்து இருக்கக் கூடிய நிலையை உள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் கூடுதலாக கைதிகளின் வாக்குமூலத்தில்தான் தங்கியுள்ளது. அதனால் உண்மைகளை முழுமையாகப் பதிவு செய்ய வேண்டும் என்பதை எதிர்பார்கின்றோம் என கைதிகளிடம் கூறினோம்.

இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) சிறைச்சாலைக்கு சென்று 8 பேரிடம் வாக்கு மூலம் பெற்றனர் என்று இதன்போது அவர்கள் கூறினார்கள். 10 அரசியல் கைதிகள் இருக்கும் நிலையில் 8 பேரின் வாக்குமூலமே பெறப்பட்டுள்ளது. இதுவரை அது மட்டுமே நடைபெற்றது என எமக்குக் கூறப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் உருக்கமாக அவசரமான ஒரு கோரிக்கையை எமக்கு விட்டனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலை அல்லது வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள விசேடமாக தமது வீடுகளுக்கு அண்மையில் உள்ள சிறைச்சாலைக்கு தமது பாதுகாப்புக் கருதி தங்களை மாற்ற வேண்டும் எனக் கோரினர்.

அந்தக் கோரிக்கையை நாம் அரசிடம் முன்வைப்போம். அத்துடன் அவர்களது விடுதலை தொர்பில் இந்த அரசுக்கும் சர்வதேசத்துக்கும் அழுத்தம் கொடுப்போம் என்பதையும் அவர்களிடம் குறிப்பிட்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

## வவுனியாவில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீடுகளில் இருந்தோர் என 03 பேர் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

தாண்டிக்குளம், வவுனியா நகர், பம்பைமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே தொற்றால் மரணித்தவர்களாவர்.

# கைதியின் தலையில் கைத்துப்பாக்கி; லொஹான் செய்தது பாரிய வன்முறை

## பொன்சேகா எம்.பி. கடும் சீற்றம்



ஒரு நபருக்கு தற்காப்புக்காக மட்டுமே கைத்துப்பாக்கி வழங்கப்படுகின்றது. இந்நிலையில், அப்பாவி கைதியின் தலையில் கைத்துப்பாக்கி வைக்கப்பட்டால் அது பாரதூரமானது. அது ஒரு வன்முறைச் செயல். இந்தச் செயலில் ஈடுபட்ட லொஹான் ரத்தவத்தவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசின் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் நாட்டைக் கட்டியெழுப்ப நியமிக்கப்படவில்லை. குடிகாரர்கள் மற் றும் போதைக்கு அடிமையானவர்கள் அங்கும் இங்குமாகச் சென்று, தங்கள் கைத்துப்பாக்கியை வெளியே இழுத்து அட்டகாசம் புரிகின்றனர்.

லொஹான் ரத்வத்த என்ற இராஜாங்க அமைச்சரின் நடத்தையைப் பார்த்தோம். அவருடைய தந்தை எங்களுடன் பணியாற்றியவர். ஆனால், லொஹான் தனது தந்தையை மதிக்காமல், அப்பாவி கைதிகளை முழங்காலிட வைத்துள்ளார். கைத்துப்பாக்கியுடன் கொடூரமாக அவர் செயற்பட்டிருக்கிறார்.

நானும் சிறைகளில் இருந்தேன். அங்குள்ள துக்க துயரம் எனக்குத் தெரியும். இது போன்ற நபர்கள் வந்தால், அவர்களைச் சகலரும் ஒன்றிணைந்து எலும்பு களை நசுக்கி வெளியேற்ற வேண்டும் என்று நான் கைதிகளிடம் கூறுகின்றேன். கைதிகளுக்காக மக்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் முன்நிற்பார்கள். இது போன்ற முட்டாள்தனமான செயல்களைச் செய்யும் மக்களை நீங்கள் ஒரு போதும் மன்னிக்கக்கூடாது. அரசு அவரை சிறைச்சாலைகள் அமைச்சகத்திலிருந்து மட்டும் நீக்கியுள்ளது. அவரிடம் இன்னுமொரு அமைச்சகம் உள்ளது. அவர் இன்னும் ஒரு மாணிக்கக் கதாபாத்திரத்தில் நடிக்கின்றார் என்று தெரியவருகின்றது.

இவருக்கு எதிராகப் பல முறைப்பாடு கள் உள்ளன. சண்டியர்களை வைத்துக் கொண்டு மாணிக்கக்கல் அகழ்வுகளில் ஈடுபடுகின்றார்.

கைதியின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்து தாக்கியவர் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் தண்டிக்கப்பட வேண்டும். லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக அரசு எடுக்கும் சட்ட முடிவுகளை நாங்கள் அறிய விரும்புகின்றோம்.

ஒரு நபருக்கு தற்காப்புக்காக மட்டுமே கைத்துப்பாக்கி வழங்கப்படுகின்றது. இந்நிலையில், அப்பாவி கைதியின் தலையில் கைத்துப்பாக்கி வைக்கப்பட்டால் அது பாரதூரமானது. அது ஒரு வன்முறைச் செயல். இந்தச் செயலில் ஈடுபட்ட லொஹான் ரத்தவத்தவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த ஒரு நபரின் கோழைத் தனத்துக்காகத் தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இதன்மூலம் இனவெறியின் உருவமாக இதை வர்ணிக்க முயற்சிக்க வேண்டாம். தற்போது இந்த நபருக்கு எந்தத் தண்டனையும் வழங்கப்படாமல் கண்துடைப்பே மேற் கொள்ளப்பட்டுள்ளது. அவரின் நாற்காலி இன்னும் அப்படியே உள்ளது.

அப்படி ஒரு விடயம் தெரிவிக்கப்பட வில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் கூறுவதை நாங்கள் பார்த்தோம். ஆடைகளை அணிந்து கொண்டா இவ்வாறு கூறுகின்றார் என்று வினவுகின்றோம். ஒவ்வொரு கைதியின் பாதுகாப்பையும் அங்கீகரிப்பது மற்றும் மனித உரிமைகள் பற்றியதும் முக்கியமல்லவா என்று நாங்கள் அவரிடம் கேட்கின்றோம்.

சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பவர்களே இவ்வாறு கூறுகின்றனர். அது எப்படி நடந்தது?எவ்வாறு நடந்தது? என்று சிறைச்சாலை ஊழியர்களிடம் கேட்கலாம். சிறைச்சாலை ஆணையாளரின் இந்தக் கூற்றை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

# காங்கேசன்துறை வீதியோரம் வீழ்ந்து கிடந்தவர் உயிரிழப்பு

## கொலை என உறவினர்கள் தெரிவிப்பு – பொலிஸ் விசாரணை

(ந.லோகதயாளன்)

காங்கேசன்துறை பிரதான வீதியில் நேற்று சுயநினைவற்று வீழந்து கிடந்த இளம் குடும்பஸ்தர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழுந்துள்ளார். அவரது தலையில் காயம் காணப்படுகின்றது எனப் பொலிஸார் கூறினர்.

அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும், விசாரணைகளை முன்னெடுத்து கொலையாளிகளைக் கைதுசெய்யுமா றும் உறவினர்கள் காங்கேசன்துறை பொலிஸாரிடம் கேட்டனர். அதனால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் நேற்று பிற்பகல் 3.30மணியளவில்இந்தச்சம்பவம்இடம்பெற்றது.

சம்பவத்தில் நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த ம.ஜெனுசன் (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை முதன்மை வீதியின் ஓரமாக ஒருவர் வீழ்ந்து கிடந்துள்ளார். அவரை மீட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்த்தபோது, உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது. சம்பவ இடத்தில் அவரது மோட்டார் சைக்கிள் வீதியில் தரித்து நின்றுள்ளது.

சம்பவத்தையடுத்து அங்கு திரண்ட உறவினர்கள் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இறுதிக்கிரியை வீடொன்றில் சிலருடன் அவர் முரண்பட்டுக் கொண்டார் என்றும், அவர்களே கொலை செய்துள்ளனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு மோப்பநாயுடன் தடயவியல் பொலிஸார் அழைக்கப்பட்டனர். விசாரணைகளின் பின்னரே காரணம் கண்டறிய முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நீண்டகாலமாக கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னும் சமூக செயற்பாடுகளில் ஈடுபட்ட வருமான பஞ்சாட்சரம் உமாபதி கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பலனின்றி வவுனியா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

இவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் வன்னித் தேர்தல் தோகுதியில் போட்டியிட்டு இருந்ததுடன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) வவுனியா மாவட்ட நிர்வாக குழு உறுப்பினரும் ஆவார்.

இதேவேளை, இவரது தாயார் இம்மாதம் 2ஆம் திகதி கொரோனாத் தொற்று காரணமாக மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)